பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 1 | ஞாயிறு 11-12-38 வெகுதான்யஹு கார்த்திகைமீ 26உ | முத்து 11

பொருள் அடக்கம்

விஷயம்			பக்கம்
1.	பிரகாசம் கமிட்டி	....	242
2.	குறிப்பு	...	243
3.	போகிற போக்கில்	...	245
4.	சென்னை சட்டசபை	...	247
5.	கிராமப் புனருத்தாரணமும் மாணவர்களும் (ஸ்ரீ. ஆர். கே. விசுவநாதன் பி. ஏ. (ஆனர்ஸ்))	...	248
6.	விசித்திரவாணி (ரஸிகன்)	...	251
7.	சினிமாவுக்கோரு சட்டம் (ஸ்ரீ. பெ. கோ. சுந்தரராஜன் பி. ஏ., எல். டி.)	...	257
8.	வாதாம் மரம் (ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி பி. ஏ., பி. எல்.)	...	259
9.	வலை வீச்சு	...	261
10.	சுகாதாரம் (ஸ்ரீ. டி. எஸ். ரமணி)	...	263

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

பிரகாசம் கமிட்டி

இனாம் ஜமீன்தாரி பிராந்தியங்களின் நிலைமையை ஆராய்ச்சி செய்வதற்காக சென்ற வருஷம் செப்டம்பர் மாதம் சென்னை சட்டசபைகள் நியமித்த கமிட்டி தனது அறிக்கையை சென்ற வாரம் சட்டசபைக்குச் சமர்ப்பித்து விட்டது. ரெவின்யூ மந்திரி கனம் பிரகாசம் அதற்குத் தலைமை வகித்தார். மாகாணத்தின் அயன் கிராமங்கள் நீங்கலாக மற்ற பாகத்தின் விவசாயப் பொருளாதார நிலைமையைப் பற்றி 1908-ம் வருஷத்திற்குப் பிறகு இதுதான் முக்கியமான தஸ்தாவேஜு. பல விஷயங்களிடையே பின் வருவன பற்றி முக்கியமாக விசாரணை செய்து தனது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதாகத் தான் இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டது :—

(1) இனாம் ஜமீன்தாரிப் பிராந்தியங்களில் குடியானவருக்கும் ஜமீன்தாருக்கும் நிலத்திலிருக்கும் சட்டபூர்வமான உரிமை (2) ஜமீன்தார் சர்க்காருக்குச் செலுத்தும் பேஷ்கஷ் அல்லது பொறுப்புக்கும் குடிகள் ஜமீன்தாருக்குச் செலுத்தும் வரிக்கும் சம்பந்தம் (3) நியாயமான மேல்வார நிர்ணயம் (4) நீர்ப்பாசனம் மேய்ச்சல், காடுகள்—இவை சம்பந்தமாகக் குடியானவர்களின் உரிமை.

கமிட்டியின் அங்கத்தினர்கள் 9 பேரில் 4 பேர் தனிக்குறிப்புகள் சேர்த்திருக்கிறார்கள். மிர்ஸாபுரம் ஜமீன்தார் ஒருவர் தான் அறிக்கையின் மூலாதாரக் கொள்கையையே ஆட்சேபிக்கிறார். கமிட்டியின் முடிவுகளில் முக்கியமானவை பின் வருவன :—

(1) ஜமீன் நிலங்களின் சொந்தக்காரர்கள் ஜமீன்தாரர்கள் அல்ல; குடிகள்தான். மேல்வாரம் வசூல் செய்யும் பாத்தியதை மட்டும் தான் ஜமீன்தாருடையது. (2) ஜமீன் குடிகள் செலுத்தும் வாரம் ரயத்துவாரி பிரதேசக் குடியானவன் செலுத்தும் நிலவரி போன்றது தான் (3) ஜமீன் குடிகளுக்கும் ரயத்து வாரிக் குடிகளுக்கும் உள்ள வித்தியாசம், முன்னவர் வரியை ஜமீன்தாரிடம் செலுத்துகிறார்கள்; பின்னவர்கள் நேரே சர்க்காருக்குச் செலுத்தி விடுகிறார்கள் என்பது தான் (4) ஜமீன்தார் வசூலிக்கும் தொகைக்கும் சர்க்காருக்குக் கட்டும் பேஷ்கஷ் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகைதான் ஜமீன்தாரின் உரிய பாகம் (5)ஜமீன்தார்களின் பேஷ்கஷ் சாசுவதாக நிர்ணயிக்கப்பட்ட 1802-ம் வருஷத்திற்கு முந்தின வருஷம் ஜமீன் குடிகள், என்ன வரி செலுத்தினார்களோ அதைத்தான் ஜமீன்தார்கள் நியாயமாக வசூலிக்கவேண்டும். (6) ஜமீன் எல்லைக்குள்ளிருக்கும் காடு மேய்ச்சல் நிலங்கள் குடியானவர்களுக்குத் தான் சொந்தம்; ஜமீன்தாரின் சொந்த சொத்தல்ல.

ஜமீன் நிலங்கள் குடிகளுக்குத் தான் சொந்தம் என்பதை மிர்ஸாபுரம் ஜமீன்தாரைத் தவிர மற்ற எட்டு அங்கத்தினர்களும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஜமீன் குடிகள் செலுத்தவேண்டிய தீர்வை (வாரம்) யை நிர்ணயிக்கும் முறையைப் பற்றி அபிப்பிராய பேதம் இருக்கிறது. ஸ்ரீ ரங்கசாமி அய்யங்கார் அந்த வாரத்தை ரயத்துவாரி முறையில் நிர்ணயிக்கலாம் என்று அபிப்பிராயப் படுகிறார். அது சரியான முறையென்று நாம் கருதுகிறோம். மொத்தம் மகசூலில் குடியானவனின் பண்ணைச் செலவு போக பாக்கியில் பாதியை வரியாக்குவது சரியென்று தோன்றுகிறது. அதனால் ஜமீன்தாரின் வருமானம் அதிகமாகிறது. அந்த அதிகப்படி ஜமீன்தாருக்குப்போகாமல் சர்க்காரையேசேரவேண்டும். அல்லது ஜமீன்தார்களுக்கு வருமான உயர்வின் விகிதப்படி வருமான வரி விதிக்கலாம்.

(244-ம் பக்கம் பார்க்க)

அயன்—இனாம்

ரெவினியூ கணக்குகளின்படி மாகாணத்திலுள்ள கிராமங்கள் அயன் கிராமங்களென்றும் இனாம் கிராமங்களென்றும் பிரிக்கப்பட்டிக்கின்றன. ரயத்துகள் சர்க்காருக்கு நேரே கிஸ்தி செலுத்தும் கிராமங்களெல்லாம் அயன் அல்லது ரயத்துவாரி கிராமங்கள்; எங்கே தீர்வையை இனாம்தார்கள் அல்லது ஜமீன்தார்கள் வசூலித்து சர்க்காருக்குக் கட்டுகிறார்களோ அந்த கிராமங்கள் இனாம் அல்லது ஜமீன்தாரி கிராமங்கள்.

அயன் கிராமங்களில் சர்க்காருக்குச் சேர வேண்டிய தீர்வை சர்க்காரால் ஒவ்வொரு செட்டில்மெண்ட் காலத்திலும் நிர்ணயிக்கப்படுகிறது; ஆனால் இனாம் ஜமீன்தாரி கிராமங்களில் குடிகள் இனாம்தாருக்குச் செலுத்தும் தீர்வையும் இனாம்தார் சர்க்காருக்குக் கட்டும் பொறுப்பும் நிரந்தரமாகிவிட்டது என்று அர்த்தம். ஆனால் பொறுப்புதான் நிரந்தரமாக மாறாமல் இருக்கிறதே தவிர குடிகள் கட்டும் தீர்வையை இனாம்தார்களும் ஜமீன்தார்களும் உயர்த்தியே வசூலித்திருக்கிறார்கள்.

மைனர் இனாம் என்ற ரயத்துவாரி கிராமங்களிலிருக்கும் சில்லறை இனாம்களின் தீர்வை (குவிட்ரென்ட்) எப்படி ஒரு இலவச விகிதமாக (Favourable Tenure) ஏற்பட்டிருக்கிறதோ அதே முறையில் தான் இனாம் ஜமீன்தாரி கிராமங்களிலும் குடிகள் செலுத்தும் தீர்வை (மேல்வாரம்) இலவச விகிதம் என்று பெயர். அதனால்தான் அந்த நிலங்களுக்கு நிலவரி வஜா கூடக்கிடையாது, ரயத்துவாரிக்கு இருப்பதுபோல். அதனால்தான் நஞ்சைகளுக்குக்கூட தண்ணீர்த் தீர்வையில் அயன் நிலங்களுக்கு இருக்கும் இலவச விகிதம் கிடையாது.

இனாம் ஜமீன் கிராமங்களில் நீர்ப்பாசனங்களுக்குக் காலா காலத்தில் சரியான மராமத்து வேலை நடப்பதில்லை. பாசன வசதிகள் குறைகின்றன; விளைச்சலோ வருஷா வருஷம் குறைந்து கொண்டே போகிறது; சாவி வந்தால் வஜா கிடையாது; தீர்வையோ அநேகமாக அயன் தீர்வையைப் போலவும் அதிகமாகவும் கூட ஆகிவிட்டது. அந்தப் பிராந்தியங்களை உடனே சர்வேசெய்து அயனைப் போலவே நிலவரி விதிப்பது மிகவும் அவசியம்.

சிறு துறைமுக நிதி வினியோகம்

சிறு துறைமுகங்களில் வசூலாகும் கட்டணங்களின் தொகை கூடுதலாகி தற்காலம் 60 லட்சமாக இருக்கிறதாம். இதில் 5 லட்சத்தை அதற்கு நிதியாக வைத்துவிட்டு பாக்கி 55 லட்சங்களை சர்க்கார் வேண்டிய போது இதர இலாகாக்களுக்கு வினியோகித்துக் கொள்ளும்படியாக அதிகாரம் பெற இந்த அசெம்பிளிக் கூட்டத்தில் கனம் யாகுப் ஹஸென் ஒரு மசோதா கொண்டு வந்தார்.

துறைமுகங்களில் வசூலான பணத்தை துறைமுகங்களுக்காகத் தான் செலவழிக்க வேண்டும். அதை வேறு விதமாக உபயோகப்படுத்த எடுத்துக்கொள்வது 'வழிப்பறி' யாகும் என்று ஸ்ரீ நட்டால் சர்க்காரைக் கண்டித்தார்.

நீர்ப்பாசன இலாகாவில் வசூலாகும் பணம் பூராவும் நீர்ப்பாசன இலாகாவிற்குத் தான் செலவாகிறதா? கலால் வரும்படி பூராவும் அந்த இலாகாவில் தான் செலவாகிறதா? ஏன், சர்க்கார் வருமானத்தின் பெருவாரித் தொகையான நிலவரி, வேறொன்றுக்கும் உபயோகப்படவில்லையா? ஸ்ரீ நட்டாலின் வாதம் பொருந்தவே பொருந்தாது.

உபயோகமற்றுக் கிடக்கும் பணத்தை உபயோகப் படுத்திக்கொள்ளுவது நிதி நிபுணத்துவத்தைக் காட்டுகிறது; நிதி நியதிக்கு விரோதமானது ஒன்றுமே அதில் இல்லை. இவ்வளவு வருஷங்களாகத் தேங்கிக் கிடந்த இந்த நீரை, மூடிக்கிடந்த மடையைத் திறந்து உபயோகம் செய்துகொள்ள முன் வந்ததற்காக நாம் சென்னை சர்க்காரின் நிதி நைபுண்ணியத்தை மெச்சுகிறோம். இந்தப் பணத்தைக் கையாள சர்க்காருக்கு பூரண அதிகாரம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. இதற்கு சரித்திர பூர்வமாக ஆதாரமும் இருக்கிறது. இங்கிலாந்தில் ஸ்ரீ சர்ச்சில் சான்ஸலராயிருந்தபொழுது இந்த மாதிரி நிதி வினியோகம் செய்திருக்கிறார் என்று 'மெயில்' பத்திரிகை எடுத்துக் காட்டியிருக்கிறது. 'மெயிலின்' ஆட்சேபணை மந்திரிகள் வினியோகத்தின் அவசியத்தை ஒப்புக்கொள்ளவில்லையென்பது தான்.

'சப்ளை' விஷயம்

ஜில்லா கலக்டர் முதல் எல்லா உத்தியோகஸ்தர்களும் கிராமங்களில் முகாம் செய்யும் பொழுது கிராம உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்குச் சப்ளை செய்து 'பில்' கொடுத்து பணம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. இதன் கீழ் நடக்கும் அட்டூழியம் 'கணக்கு வழக்கு' இல்லை. ஒரு அதிகாரிக்கு கிராமாதிகாரி 100 ரூ. 'சப்ளை' செய்திருந்தால் அவன் 25 ரூபாய்க்கோ அல்லது குறைந்தோ தான் 'பில்' கொடுக்க வேண்டும். இந்தக் கொடுமை ஒழிய வேண்டும்.

அசெம்பிளியில் 2-ம் தேதி இது விஷயமாக ஒரு அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு ஸ்ரீ விசுவநாதம் ரெவினியூ போர்டின் 113-வது நிரந்தர உத்திரவின்படி அதிகாரிகள் பணம் கொடுக்காமல் கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து 'சப்ளை' பெறக்கூடாதென்று இருக்கிறதென்று பதில் சொன்னார். அதிகாரிகள் அதற்கு விரோதமாக நடந்துகொள்ளுகிறார்கள் என்பதற்கு ருஜு ஏற்படுகிற வரையில் சர்க்கார் உத்தரவுப்படிதான் எல்லாம் நடக்கின்றன என்றும் கருதப்படுகிறது என்றும் சொன்னார்.

இந்த முக்கியமான விஷயத்தில் காங்கிரஸ் சர்க்கார் இப்படிப் பதில் சொல்லக் கூடாது. இந்த உத்தரவையே ரத்து செய்ய வேண்டும். அதிகாரிகள் தங்கள் சேவகர்களையோ பட்லர்களையோ கொண்டு தங்கள் சாமான்களை வாங்கிக் கொள்வதில் ஒன்றும் சிரமமில்லை. கிராம உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் மூலம் குடிகளையும் அடிக்கடி வதை செய்ய வேண்டாம். இந்த விதி உடனே ஒழிய வேண்டும்.

பாஷை நெருக்கடி

ஆந்திர மாகாணப் பிரச்னை தீவிரமானதற்குப் பிறகு, திடீரென்று அசெம்பிளியில் சிலருக்கு ஆங்கிலம் அர்த்தமாகாமல் போய் விட்டது; தெலுங்கில் பேச வேண்டுமென்றும் தோன்றிவிட்டது. இதன் காரணமாக சில ஆந்திர அங்கத்தினர்கள் அனுவசியமாகத் தொல்லை கொடுத்து அசெம்பிளியின் காலத்தை வீண் அடிக்கிறார்கள். அங்கத்தினர் உரிமை என்று இதைப் பெரிதாக்கி அசெம்பிளியில் உபயோகமற்றுப் பொழுது போக்கு ஏற்படுவது வருந்தத்தக்கது.

இத்தனை நாள் இல்லாத உரிமை கொண்டாடும் மனப்பான்மை இப்பொழுது ஏன் ஏற்பட்டிருக்கிறது? ஆந்திர மாகாணக் கிளர்ச்சிக்குப் பலம் கொடுப்பதற்காகத்தான் இந்த வேலை. இப்படிச் செய்வது ஒரு விதத்தில் காங்கிரஸ் ஆணைக்குக் கீழ்படாத தான்தோன்றித்தனம் என்றுகூடச் சொல்லலாம். அசெம்பிளித் தலைவர் இந்த அங்கத்தினர்களின் போக்கு சரி என்று கருதுவதைக் கண்டு ஆச்சரியப்படுகிறோம்.

அகில இந்திய பொருள் காட்சி

வழக்கம்போல இந்த வருஷமும் அகில இந்திய காதி சுதேசி பொருள் காட்சி டிசம்பர் 17-ம் தேதி முதல் ஜனவரி 15-ம் தேதி வரையிலும் காங்கிரஸ் மண்டபத்தில் நடைபெறுகிறது. ஸ்ரீமதி சரோஜினி தேவி அதைத் திறந்து வைக்கிறார்.

அதில் இந்த வருஷம் படக்காட்சி விசேஷமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம்.

குடிசைத் தொழில்களில் சில நடைபெறும் வகையையும் அதில் காணலாம்; அந்த அம்சம் இவ்வருஷம் மிகவும் விசேஷமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

(242-ம் பக்கத் தொடர்ச்சி)

மொத்தத்தில் கமிட்டியின் சிபார்சுகள் மிகவும் அவசியமான மாறுதல்களை ஒட்டியே செய்யப் பட்டிருக்கின்றன. ஜமீன் குடிகளின் கஷ்டங்களையும் கமிட்டியார் நன்றாகப் பரிசீலனை செய்திருக்கிறார்கள். முடிவுகளும் மிகவும் முற்போக்கான முடிவுகளாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

போகிற போக்கில்

நண்பர்களே, நான் ஒரு கனவிலிருந்து விழித்துக் கொண்டவன்போல் இருக்கிறேன். நமது பிரதம மந்திரி ராஜாஜிக்கு ஓர் பெரும் புதையல் கிடைத்ததென்று கேள்விப்பட்டேன். அதுவும் எவ்விடத்தில்? 'ராவணன் மீசை'யென்று வர்ணிக்கப்படும் பூண்டு மண்டிக்கிடக்கும் மண் குவியல்கள் வாய்ந்த வங்காள விரிகுடாவின் கடற்கரையிலுள்ள நமது சில்லரைத் துறைமுகங்களிலிருந்து கிடைத்ததாம். என்ன அதிசயம், என்ன அதிருஷ்டம்! கிளிஞ்சல் அல்ல. ரொக்கப் பணம் 60 லட்சம். ராஜாஜி கை வைத்ததெல்லாம் பொன்! கள்ளுக்கடையை மூடினார்; சேலம் ஜில்லா பொன் மயமாய்ப் போய் விட்டது. துறைமுகத்தைத் தோண்டினார்; புதையல். காந்தி மகாத்மாவின் மகிமையே மகிமை.

* * *

நமது துறைமுகங்களில் புதையல் கூட உண்டா என்று ஆச்சர்யப்பட்டுக் கதையைக் கேட்போமென்று 'காலி ப்ரூபை' விட்டு விட்டு சட்டசபைக்கு ஓடினேன். பழைய "செனட் ஹவுஸ்"—பரீக்ஷையில் என்னைப்போல் பால்யத்தில் பல தடவை தவறினவர்கள், பரீக்ஷைக்கே போகாதவர்களெல்லாம் பலபேர் கூடி அவ்விடத்தில் இப்பொழுது கட்டு மீசையோடு அங்கத்தினர்களாய் மெத்தையிட்ட நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். இரண்டு மணி நேரம் காத்திருந்து காது கொடுத்துக் கேட்டேன். ஒலி, எதிரொலி எல்லாம் ஒன்று கூடிப் பேசின. பேசியவர்கள் தன் ஞாபகமாகவே பேசினார்கள். "மைக்ரோபோனை" தவிர வேறு எவரும் காது கொடுத்துக் கேட்டதாகப் புலப்படவில்லை—பத்திரிகை ரிபோர்டர்கள் நீங்கலாக. ஆனால் எல்லோரும் உல்லாசமாய் இருந்தார்கள். இப்படி நமது பாரதநாட்டில் நாற்பது கோடி ஜனங்களையும் ஓர் புது இந்தியா சட்டம் கொண்டுவந்து அதன் மூலமாக அங்கத்தினர்களாய்ச் செய்து விட்டால் எவ்வளவு குதூகலமாயிருக்கும்?-தேசத்திற்கு க்ஷேமம் உண்டாகும்?

* * *

இப்படியெல்லாம் யோசித்துக்கொண்டு கிளிஞ்சல் துறைமுகத்தில் பணப்புதையலெடுத்த ராஜாஜியைக் கண்ணிட்டுக் களித்துப் பார்த்துக்கொண்டே யிருந்தேன். பிரதம மந்திரியல்லவா? தூரப்பார்வைக்கு மேனியும் அன்பும் சாந்தமும் இன்னும் அதிகரித்துக் குடிகொண்டு காணப்பட்டன. தட்டிகளால் தடைபட்டாலும், சூரிய வெளிச்சம் உட்புகுந்து அழகாய் வீசி அந்த சபைக்கு ஓர் காந்தியைக் கொடுத்தது. ஆனால் ராஜாஜியின் புன்சிரிப்புக்குள்ள வரட்சியும், ஈட்டிப் பாய்ச்சலும் கூர்மையும் கொஞ்சம்கூட இந்த ஒளிப் பெருக்கில்நயம்பட்டதாகத் தோன்றவில்லை நமது ராஜாஜி சிறுயெதில் "பலி சப்ளா குடு குடு" ஆட்டம் நன்றாய் ஆடியிருக்க வேண்டும். எவரும் அவரைக் கண்டு பயந்திருக்கவேண்டும். அரசியலிலும் அதே விளையாட்டு; விடாத மூச்சு; சுறுசுறுப்பு. பிறர் தொட விடுகிறது இல்லை. பிறருக்கு ஆட்டமும் கிடையாது. 60 லக்ஷம் ரூபாய் பணம் கிடைத்த சமயமாவது தாராளமாய் கலகலவென்று ஓட்டிப் பேசி விஸ்தாரமாய் சூரிய வெளிச்சம்போல் பிரகாசமாய் சிரிக்கக்கூடாதா, களிக்கக் கூடாதா? ஸ்ரீ நட்டால் துரை என்ன சொன்னால் நமக்கென்ன? 60 லெட்சத்தை அவர் தொடமுடியுமா? அரசியல் என்கிற சீட்டாட்டத்தில், தழையாயிருந்தாலும் துருப்பாயிருந்தாலும் அதை வீசி ஜாக்கியைக் கூட வெட்டிவிடலாமே. ஆட்டத்தை ஜெயிக்கலாமே!

ஆனல் ராஜாஜி எப்படி சந்தோஷப்படு கிறது. பணம் சர்க்கார் பணம் தானே? மேகமண்டலம் வரை உயர்ந்திருக்கும் அதிகாரிகள் சம்பளத்துக்குத்தானே சரியாயிருக்கிறது. ஜனங்களுக்கு கடைமடை பாய்ச்சல்தானே. புதையலை எடுத்துக் கொடுத்தவர் மற்ருெருவர்—கனம் யாகூப் ஹாஸென். அவரைப் பார்த்த பிறகுதான், அவர் பேச்சைக் கேட்டபிறகுதான், வாஸ்தவத்தில் ஒரு பெரும் புதையல் காங்கிரஸ் மந்திரிசபைக்குக்கிடைத்திருக்கிறதென்று நம்பினேன். ஆண்டு அனுபவித்தவர்போல் விசாலமாய்க் களித்துப் பேசினர். ஆனல் உண்மையில் இதைக் கண்டெடுத்துக் கொடுத்த குமாஸ்தாவை நான் காண விரும்புகிறேன். அவருக்கு சலாம். உயிருக்கு அஞ்சாமல் கடலில் முத்துமணி எடுக்க முழுகுகிறவர்களா முத்துஹாரத்தைக் கழுத்தில் போட்டுக்கொள்ளப் போகிருர்கள் ?

போகட்டும் நமது மந்திரி சபைக்கு ஒரு வேண்டுகோள். இந்தப் புதையலைச் சரியாகச் செலவழிக்க வேண்டும். சில்லரைத் துறைமுகங்கள் அபிவிருத்திக்கே செலவழிக்க வேண்டும். திருச்சிஞப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஜில்லாக்களுக்கு சென்னை ஒரு நாளும் சரியான துறைமுகம் ஆகாது. அது காதால் அல்லது மூக்கால் கஞ்சி குடிப்பது போல். வயிற்றுப் பசி தீராது. கடலூரிலிருந்து தூத்துக்குடி வரையில் நன்ருகச் சமுத்திரக் கரையோரத்தின் ஆழத்தையும் இதர வசதிகளையும் கவனித்து ஓர் புதிய துறைமுகத்தை ஏற்படுத்த வேண்டும். அல்லது இப்பொழுது சின்னதாக இருப்பதைப் பெரிதாகச் செய்வது மிகவும் அவசியம். இது காங்கிரஸ் மந்திரிசபையின் முதல்கடமை. மத்திய சர்க்கார் உத்திரவு வேண்டுமென்ருலும் அதைப் பெற்றுக்கொண்டு இந்த சீர்திருத்தத்தைச் சரியாக உடனே செய்தால் தான் தமிழ்நாட்டிற்கு இயல்பான வியாபார வசதிகளும்செழிப்பும் ஏற்படும்; ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்கும் உயிரும் உற்சாகமும் உண்டாகும். பல கோடி ஜனங்களுக்கு ரூபாய்க்கு ஒரு அணு ஏற்றுமதியிலும், இறக்குமதியிலும் லாபம் கிடைக்கும். இப்பொழுது சென்னைத் துறைமுகம் கண்ணுக்கு அழகாயிருந்தாலும் கைக்குக் கிட்டமில்லை. இதன் மூலம் நடக்கும் வியாபாரம் சுற்று வழி. மூக்கைத் தலையைச் சுற்றிப்பிடிப்பதுபோல். நேரோட்டமல்ல. ஜனங்களுக்கு மிகச் சௌகரியக் குறைவு.

இப்படி ஆலோசித்துக் கொண்டிருந்தேன். மந்திரிசபையில் எனக்கு ஓரிருவர் நண்பர்களுண்டு—உண்டென்று நினைத்து வருகிறேன். துறைமுகத்தில் புதையல் கிடைத்த விஷயமாய் அவர்களைப் போய்க் கண்டு கை குலுக்கலாமென்றும் சில வார்த்தைகள் சொல்லலாமென்றும் என் இடத்தை விட்டு எழுந்தேன். உடனே மனது மாறிவிட்டது. ஏழை வார்த்தை எங்கு அந்த மெத்தை போட்ட இடத்தில் செல்லப் பொகிறதென்று எண்ணி தலை குனிந்து விரைவாய்க் கடலோரம் சென்றேன். மணல் முட்டுக்களைப் பார்த்து அதன்மேல் உட்கார்ந்துகொண்டு மணலை நானும் கிண்டிப் புரட்டிப் பார்த்தேன்.என் கைக்கு ஓட்டை உடைசல் கிளிஞ்சல்கள் தான் கிடைத்தன. ஏன் என்று வியந்தேன். நான் பிறந்ததும் ஓர் துறைமுகம். படித்ததும் ஓர் துறைமுகம். பிழைக்கும் வழி தேடினதும் ஓர் துறைமுகம். அதில் தோல்வி அடைந்ததும் ஓர் துறைமுகம். ஆனலும் என்ன பிரயோஜனம்? அலை ஓசைதான் மிச்சம். சேலம் ஜில்லாவில் கல்லிலும் முள்ளிலும் பிறந்தாலும் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரைப்போலல்லவோ பிறக்கவேண்டும்? தேசத்திற்கு வஞ்சனை இல்லாத தொண்டு செய்யவேண்டும்? பிறகு தொட்டதெல்லாம் பொன்! சிலர் அப்படி அல்ல என்று சொல்லுகிருர்கள். நான் அதை நம்பவில்லை; எடுத்துக் கொள்ளவில்லை. ஹிந்தி எதிர்ப்பைச் சேர்ந்தவனல்ல. வீசும் காற்றை எதிர்த்து அடிக்கமுடியுமோ? கை நரம்புதான் பிசகிப் போகும். அதுவும் காங்கிரஸ் அரசியல் காற்றை!

மெய்ம்மறந்து மெத்தைபோலுள்ள மணல் குவியலில், குழந்தைபோல் எனக்குள்ளே பேசிக்கொண்டு வெகு நாழிகை கழித்தேன். சென்றவாரம் போகிற போக்கில் நழுவிப் போய்விட்டது. நல்லதாய்ப் போய்விட்டது. பத்துவாரத்திற்கு ஒருநாள் கூட எனக்கு லீவு வேண்டாமா?

மணி.

சென்னை : : சட்டசபை

(சட்டசபை நிருபர்)

'அவசரப் படேல்' என்பது பழைய நாளைய வாக்கியம்; உபதேசம்; பய முறுத்தல்கூட. ஆம் 'பழைய நாளைய' வாக்கியம் தான். அவசரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்தால் உருப்படாது என்று அப்போது கருதி வந்தார்கள். ஆனால் இப்போது, அவசரப்பட்டால் காரியம் கெட்டுப்போகாது; அவசரப் படா விட்டால்தான் தேசம் குட்டிச் சுவராய்ப் போகும் என்பதை நிரூபிப் பது போல் சென்னை சட்டசபை காரி யாதிகளை நடத்துகிறது.

பாருங்கள், சென்ற ஒரு வாரத்தில் சட்டசபை சுகாதார மசோதாவை யும், ஆலயப்பிரவேச மசோதாவை யும், சிறு துறைமுக நிதி மசோதாவை யும் கொண்டுவந்து தனிக் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறது. இந்த ஐந்து நாளைக் குள் மூன்று மசோதாக்களா? அடே யப்பா......

* * *

டாக்டர் ராஜனால் கொண்டு வரப் பட்ட சுகாதார மசோதா கடும் விவாதத் துக்கு உள்ளாயிற்று. ஸ்ரீ ஜி. கிருஷ்ண ராவ் இந்த மசோதாவை ஏன் அவ சரமாக நிறைவேற்றவேண்டும் என்று ஆச்சர்யப்படுவதற்குள்ளாகவே 'லபக்' கென்று தனிக் கமிட்டியிடம் மசோதா போய்ச் சேர்ந்தது.

* * *

மலையாள ஆலயப் பிரவேச மசோ தாவை ஆதரித்துப் பல அங்கத்தினர் கள் பேசினார்கள். ஸ்ரீ. அண்ணாமலைப் பிள்ளை 'எல்லோரும் ஒத்துழைத்து மசோதாவை நிறைவேற்றி வைப்பது மட்டுமல்லாமல் வெற்றி உண்டாக்க வேண்டும்' என்று மன்றாடினார். அவர் திருப்பித் திருப்பி கெஞ்சியபோது அங் கத்தினர்கள் கிடக்கட்டும், நாமாவது மலை யாளத்திற்குப் போய் ஹரிஜனங்களைக் கோயில்களுக்குக் கொண்டுபோய் விட்டு விட்டு வந்தால்தான் அவர் திருப்தி அடைவார் போல் இருந்தது.

நமது ஸ்ரீ. கத்தே ரங்கைய நாயுடுகூட சட்டசபையில் பேசினார். அல்லது பாடி னார். எவ்வளவு சுலோகங்கள், பத்தியங் கள்? நாயுடுகாருக்கு வஞ்சனையே யில்லை. பொதுக் கூட்டமா யிருந்தாலும் சரி, சட்டசபையா யிருந்தாலும் சரி தன் குரல் வன்மையை அனைவருக்கும் தெரி யப்படுத்தினால் தான் அவருக்குத் திருப்தி உண்டாகும். அன்று அவர் மைக்ரபோனைக்கூட அடித்து தன் சாமர்த்தியத்தை அதற்குத் தெரியப் படுத்தினார் என்றால் பார்த்துக் கொள் ளுங்களேன்.

* * *

ஆந்திர அங்கத்தினர் ஒருவருக்கு இங்கிலீஷ் தெரிந்திருந்தும் அன்றைக்கு தெலுங்கில் 'மாட்லாட' வேண்டுமென்று தோன்றிற்று. தெலுங்கில் பிரதம மந் திரி பதில் சொல்ல வேண்டுமென்றும் கேட்டார்.

சட்டசபை ஒன்றரை வருஷமாக நடக்கிறது. அன்றைக்கு மட்டும் அந்தக் கஷ்டம் தோன்றுவானேன்? கஷ்டம் இதற்குமுன் தோன்றியிருந்தால் அந்த சமாசாரத்தை சட்டசபையில் ஏன் எழுப்பவில்லை என்று நாம் சந்தேகப் படுகிறோம். ஆனால் அன்றைக்கு உதவி இந்தியா மந்திரி சென்னைக்கு வந்திருப் பதைப் பார்த்தும் சந்தேகம் தீர்ந்து சம் பந்தப்பட்ட ஆந்திர அங்கத்தினருக்கு 'ஷொட்டு'க் கொடுக்க வேண்டுமென்று தோன்றுகிறது. பேஷ்! அதான் சரி. சரியான சமயம் பார்த்து ஆந்திர மாகா ணப் பிரிவினைக்கு அடிப்போட்டாகி விட் டது. ஆனால் பாவம், இந்த கோலாகலம் நடக்கும்போது உதவி மந்திரி சபைக்கு வரவில்லையே என்பதை நினைக்கும்போது சிலர் வருத்தப்படலாம். அதனால்மோசம் போய்விடவில்லை. மறுநாள் பத்திரிகை யில் நடவடிக்கைகளைப் படித்திருப்பார்.

கிராமப் புனருத்தாரணமும் மாணவர்களும்

(ஸ்ரீ. ஆர். கே. விஸ்வநாதன் பீ. ஏ. (ஆனர்ஸ்) அண்ணுமலை சர்வகலாசாலை)

நமது தேசம் முன்னேற வேண்டுமென்ருல் கிராமங்களிலிருந்து சீர்திருத்தம் ஆரம்பிக்க வேண்டுமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இது எப்படி என்பதற்கு ஒரு பொது கூட்டத்தில் சில வருஷங்களுக்கு முன் நமது பிரதம மந்திரி ராஜாஜி சொன்ன உபமானம் ஞாபகத்திற்கு வருகிறது. ஒருவன் இடுப்பிற்குக் கீழ்க் கந்தையைக் கட்டிக்கொண்டு, அதற்குமேல் ஷர்ட்டும், விலை யுயர்ந்த கோட்டும் அணிந்துகொண்டிருந்தால் எவ்வாறு இருக்குமோ அது போலப் பெரும் பான்மையான ஹரிஜனங்களும், கிராமங்களில் வசிக்கும் மற்றவர்களும் சீர்திருத்தம் அடையாமல், பட்டினங்களில் வசிப்பவர்கள் மட்டும் நாகரீகத்திலும், மற்ற விஷயங்களிலும் முன்னேறி இருந்தால் இருக்கும் என்பதை எல்லோர் மனதிலும் தைக்கும்படி சொன்னுர். அதை நன்குணர்ந்த நம்முடைய காங்கிரஸ் தலைவர்கள், அத்தகையவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டுக்கொண்டு வருகிருர்கள். சட்டசபைகளில் புகுந்ததற்கும், மந்திரி வேலையை ஒப்புக்கொண்டதற்கும் முக்கியக் காரணம் இதுதான் என்பது வெளிப்படை. சென்ற ஒன்றரை வருஷங்களாக நம்முடைய மாகாணத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது முதற்கொண்டு அவர்கள் கிராம முன்னேற்ற சம்பந்தமாகச் செய்து வரும் வேலை பாராட்டத்தக்கது. இருந்தாலும் செய்ய வேண்டிய வேலையைக் கவனிக்கும்போது செய்த வேலை குந்துமணி யளவுதான் ஆகியிருக்கிறது.

இந்த கிராம முன்னேற்ற விஷயத்தில் சர்வ கலாசாலையிலும், கல்லூரிகளிலும் வாசிக்கும் மாணவர்கள் பெரிதும் பங்கு எடுத்து கொள்ளலாம். அதிலும் ஆங்காங்கு இருக்கும் சாரணக் கூட்டத்தார்கள் அந்த வேலையை முக்கியமாகக் கைக்கொள்ளுதல் அவசியமானது. இதை முக்கிய நோக்கமாகக் கொண்டு அண்ணுமலைச் சர்வ கலாசாலைச் சாரண வகுப்பு தீவிரமாக வேலை செய்து வருகிறது. அவர்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் சுற்றுவட்டத்தில் உள்ள கிராமங்களுக்குச் சென்று சேரிகளில் நுழைந்து அங்கு இருப்பவர்களை முதலில் கிராமபோனை வைத்துத் திரட்டி அவர்களிடையில் நல்லொழுக்கம், சுத்தமான வாழ்வு, குடியை ஒழித்தல் இம்மாதிரி விஷயங்களைப் பிரசாரம் செய்து வருகிருர்கள். முதன் முதலில் செல்லுகையில் அவர்களைக் கண்டு வெருண்டு ஓடிய ஹரிஜனங்கள் இப்பொழுது தாராளமாக அவர்களருகில் வந்து தங்களுடைய குறைகளைச் சொல்லிக் கொள்ளுவதோடல்லாமல் சகஜமாகப் பழகியும் வருகிருர்கள்.

அவ்வாறு அவர்கள் செல்லுகையில் இந்த வேலையைத் தவிர கீழ்க் கண்ட கேள்விகளுக்கும் விடை சேகரித்து வருவது வழக்கம். நமக்குக் கிராம சம்பந்தமாகத் தெரிந்த விஷயம் மிகவும் சொற்பமானதால் இந்த விடைகள் பெரிதும் பயன்படும் என்று சொல்வது மிகையாகாது. மேலும், செல்லுபவர்கள் மாணவர்களாதலால் அவர்களுடைய முன்னேற்றத்தை உத்தேசித்தும் இந்த கேள்விகள் தயாரிக்கப்பட்டன. இதே மாதிரி கிராமப் புனருத்தாரண விஷயமாக வேலை செய்ய வேண்டுமென்று கருதுகிற மாணவர்களுக்கு இந்தக் கேள்விகள் பயன்படுமாதலால் அவைகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அண்ணுமலைச் சர்வ கலாசாலைச் சாரண வகுப்பு கிராமப் புனருத்தாரண கேள்வித் திட்டம்:—

I. இயற்கை :—

(Physical) (1) கிராமத்தின் பெயர்.

(2) கிராமத்தின் அமைப்பு எல்லை களைக் காண்பிக்கும் ஒரு படம்.

(3) மொத்த நிலம் (ஏக்ராக்களில்)

(4) பூமியின் திறம்—கருப்பு, சிவப்பு, களி அல்லது மணல்.

(5) மழை—மொத்தத்தின் விபரம், ஒரு வருஷத்தில் மழை பெய்யும் நாட்க ளின் அளவு.

II. விவசாயமும், கால்நடை அபிவிருத் தியும் :—

(A) மொத்த நிலம்

(1) நன்செய்—எவ்வளவு போகம் சாகுபடி; சராசரி விளைச்சல்.

(2) புன்செய்—சாகுபடியாகும் பயிர் கள்.

(3) ,, —கரிகாய்த் தோட்டங் கள்.

(4) ,, —கால்நடை யுணவுப் பயிர்கள்.

(5) பொது நிலம்—தரிசு எவ்வளவு?
,, —மேய்ச்சல் நிலம் எவ்வளவு?

(6) காடுகள்—இருப்பின் மரங்களின் விபரம்.

(B) பட்டாக்கள், பட்டாதாரர் களும் :—

(1) பட்டாவின் விபரம்—ஜமீன், இனும், ஜாகிர், மிட்டா, ரயத்வாரி.

(2) ஊரில் மிகவும் குறைந்த பட்டா எவ்வளவு?

(3) ஜாஸ்தியான பட்டா எவ்வளவு?

(4) ஜாதி மதங்கள் பிரகாரம் பிரிக்கவும்.
- (1) மிராசுதாரர்களின் தொகை
- (2) குடியானவர்களின் தொகை
- (3) பண்ணையாட்களின் தொகை
- (4) வாரத்திற்குப் பயிர் செய்பவர்கள்
- (5) ஊரில் குடியில்லாத மிராசுதாரர்கள்

(C) பட்டாக்கள் :—

(1) மொத்த பட்டாக்கள்—பட்டா தாரர்களின் தொகை.

(2) பத்து ரூபாய்க்குக் குறைந்து கிஸ்தி செலுத்தும் பட்டாதாரர்களின் தொகை; அதற்குமேல் செலுத்துவோ ரின் தொகை.

(D) நில வரி :—

(1) கிராமத்திலிருந்து வசூலாகும் மொத்த கிஸ்தி.

(2) தீர்வையும் அதன் விபரமும்.

(E) தண்ணீர்ப் பாசனம் :—

(1) அவற்றின் விபரம், குளம், ஏரி, கிணறு, ஆறு.

(2) அரசாங்கத்தார் அதற்காகத் தனித் தீர்வை விதிக்கிறார்களா?

(3) குடி தண்ணீர்—ஊர் ஜனங்கள் குடிப்பதற்கு உபயோகிக்கும் தண்ணீர் கிடைக்குமிடமும், அதன் பரிசுத்தமும்.

(4) நிலங்களின் பாய்கால் வடிகால்—வீடுகளின் சாக்கடைத் தண்ணீரைப் போக்கும் விதம்.

(F) கால்நடை :—

(1) கறவைகள், வண்டி மாடுகள் இவை களின் மொத்தம்.

(2) உழவு மாடுகள்.

(3) ஆடுகளின் தொகை—ஆடு மாடுக ளின் தோல்களைப் பயன்படுத்தும் விதம்.

(4) பன்றிகள்.

(5) வாத்து, கோழி.

(6) மீன் பிடித்தல்.

(7) வாத்து, கோழி, மீன் நகரங்க ளுக்கு விற்பனைக்காகக் கொண்டுபோவது உண்டா?

(8) அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்டிருக்கிற விவசாய இலாகா மிருக வைத்திய இலாகா இவைகளின் உபயோ கத்தைக் கிராம வாசிகள் அறிந்து பய னடைந்து வருகிறார்களா?

III. பொருளாதாரம் :—

(A) விவசாயம் தவிர வேறு கைத் தொழில்கள் உண்டா—அதன் விபரம், அதனால் கிடைக்கும் கூலி.

(B) குடிசைக் கைத் தொழில்கள்—என்ன, எப்படி நடைபெறுகின்றன.

(C) (1) விவசாயிகளின் மொத்தத் தொகை.

(2) விவசாயியின் வேலையை மேற் பார்ப்பவர்களின் மொத்தத் தொகை.

(3) அவர்களின் கூலி—பண மாகவா அல்லது தானியமாகவா.

(4) மேற் பார்வையிடுபவர்களின் ஊதியம்.

(D) கைத்தொழில்களினுல் ஜீவித்து வருபவர்களின் மொத்தத் தொகை.

(E) கடன் வாங்குவதற்கு உண்டான வசதிகள்—வட்டி விகிதம் — அடமானத்திலிருக்கும் பூமிகள் — கடன் தொகை விபரம்—கடன் நிவாரணச் சட்டத்தினுல் ஏற்பட்ட அனுகூலம் யாது?

(F) போக்குவரவு:—வெளியூர்களுக்குச் செல்லுவதற்கு உண்டான வசதிகள்—அதன் செலவு விபரம்.

(G) சந்தைகள் — என்னென்ன விற்கப்படும்?

(H) கூட்டுறவுச் சங்கங்கள் உண்டா? அவைகளினுல் ஜனங்களுக்கு அனுகூலமுண்டா?

(I) வேலை அதிகமுள்ள காலம் யாது? —ஓய்வு காலம் யாது?

(J) வருமான வரி கொடுப்பவர்கள் உண்டா?—வேறு வரிகள் உண்டா?

IV. அரசியல் துறை:—

(1) வாக்குரிமையாளரின் ஜாப்தா.

(2) கிராம உத்தியோகஸ்தர்கள்—அவர்களின் சம்பளம்—அவர்கள் நிர்வாக தோரணை.

(3) பஞ்சாயத்து கோர்ட்—எவ்வாறு வேலை செய்கிறது.

(4) ஜில்லா போர்டு, மாகாண அரசியல் இவைகளைப்பற்றி குடிகள் கொண்டுள்ள அபிப்பிராயம்.

(5) தொழில் சம்பந்தமாக வேலை நிறுத்தம் உண்டா?—தொழிலாளிகளுக்கும் மிராசுதாரர்கள் அல்லது முதலாளிகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்.

(6) தீண்டாமை, மதுவிலக்கு இது சம்பந்தமாகக் கிராமத்தாரின் அபிப்பிராயம் என்ன?

V. கல்வி:—(1) பள்ளிக்கூடம் செல்லும் ஆண் பெண் மாணவர்களின் மொத்தத் தொகை என்ன?

(2) பள்ளிக்கூடத்தின் வகையும், இருப்பிடமும்.

(3) உபாத்தியாயர்கள் எத்தனை—பள்ளிக்கூட நிர்வாகம் நடைபெறும் முறை, செலவு முதலிய விபரங்கள்.

VI. சுகாதாரம்:—

(1) ஊரில் தொத்து வியாதிகள் உண்டா?

(2) வைத்தியர்கள் இருக்கிறார்களா?—அப்படியானுல் அவர்களின் யோக்கியதையும், படிப்பும் யாது.

(3) முக்கியமான உணவு என்ன—ஜாதிவாரியாகத் தெரிந்து கொள்ளவும்.

(4) மல ஜலம் கழிக்க வசதி உண்டா—கக்கூஸ்கள், சாக்கடைகள்.

VII. கிராமக் கேளிக்கைகள்:—

(1) கூத்து, கோழி, ஆடு சண்டை உண்டா?

(2) சமீபத்திலிருக்கும் நகரத்தில் உள்ள வசதி.

(3) குடி உண்டா, கள்ளுக்கடை, கஞ்சா, அபின் கடைகள் உண்டா—மொத்தம் குடிப்பவர்களின் சங்கியை.

VIII. சரித்திரமும்,பழைய குறிப்புக்களும்:—

(1) கோவில்கள்—விபரம் — தற்கால நிலைமை — பூசாரிகள் — உயிர்ப் பலி கொடுப்பதுண்டா—உற்சவ காலம் யாது.

(2) கோவில் நிலங்களின் விபரமும் அதன் நிர்வாக முறையும்.

(3) ஊர் சம்பந்தமாகக் கதைகள் ஏதேனும் உண்டா—கல் வெட்டு சாஸனங்கள் அல்லது விக்ரங்கள் அகப்பட்டனவா.

விசித்திரவாணி

"ரஸிகன்"

ராமாநுஜத்துக்கு கஸ்டம்ஹௌஸில் வேலை. மைலாப்பூரில் ஜாகை. ஆகையால் முப்பத்தைந்து ரூபாய் சம்பளத்தில் மாதம் ரூ. 5 கொடுத்து டிராம் 'பாஸ்' வாங்கவேண்டியிருந்தது. ஆயினும் அந்தச் சிலவை அவன் மனதாரச் செய்தான். நாலு குடியோடு ஐந்தாவது குடியாய் தான் இருந்துவந்த வீட்டில் சற்று நேரம்கூட நிம்மதியாய் இருப்பதற்கு வசதியில்லை. ஆபீசிலோ காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மூச்சு விடாமல் வேலை. காப்பி குடிக்கக்கூட நேரம் அகப்படுவது கஷ்டம். ஆகையால் டிராம் வண்டியில் அவன் தினம் சிலவிடும் இரண்டு மணி நேரந்தான் கவலையற்று, ஸம்ஸார பந்தத்தில் அகப்பட்டுச்சுழலும் ஆத்மாக்களில் தானும் ஒன்று என்பதை முற்றிலும் மறந்து, உலகத்தின் விசித்திரங்களையும் வேஷங்களையும், கோரங்களையும் நாடகம் பார்ப்பவன்போல் கண்டு களிக்கும் தருணம். அவன் டிராமில் ஏறினால் அனுவசியமாய்ப் பிறரிடம் பேசுவதில்லை. நீண்ட காரிடர் வண்டியில் வெயில்படாத பக்கத்தில் வண்டிப் போக்குக்கு எதிர்முகமாயுள்ள இரண்டு பேருக் கமைக்கப்பட்ட 'சீட்'டில் ஜன்னல் ஓரம் உட்கார்ந்து, மற்றவர் பேசும் விஷயங்களை விடாமல் காது கொடுத்துக் கேட்பதே அவனுக்கு ஆனந்தம்.

தினசரிப் பத்திரிகைகள் மூலமாய் வெளிவரும் உலக வர்த்தமானங்களும், எந்தப் பத்திரிகையிலும் கண்டிராததும் அச்சுப்போடத் தகாததுமான எண்ணிறந்த விஷயங்கள்—வம்பு, அவதூறு, வெறும் புளுகு, கைச் சரக்கு முதலிய பல தினுசுகளும்,—தாராளமாய் நடமாடும் அந்த இடத்தில் யாரோ அன்று ஆகாசவாணியைப்பற்றி பேச்சையெடுத்தார். "என் ஸார், ஜெர்மனியில்ரேடியோ 'செட்' 35 ஷில்லிங்குக்குக் கிடைக்கிறதாமே. ஜெர்மனிக்காரன் கெட்டிக்காரன் கெட்டிக்காரன்தான்" என்று உபக்ரமம் பண்ணினார். அதற்கு நாலு இடம் தள்ளி அப்பால் உட்கார்ந்த ஒருவர், "அது ஒண்ணும் பெரிய வித்தை யில்லை. ஜப்பான் 'செட்டு' 15 ரூபாய்க்கு ஆப்படரது. நம்ம ஊரில் அதற்கும் குறைவாய் முடியும் என்று ஸ்ரீ மனு ஸுபேதார் அன்று பிரசங்கம் செய்யவில்லையா? அதற்கென்ன, அநியாய ராஜ்யமாயிருப்பதால், வெள்ளைக்காரர்கள் பணத்தை மூட்டை யடித்துப் போகட்டுமென்று, 'ரேடியோ' வியாபாரத்தை நம்நாட்டில் துவக்கக் கொஞ்சமும் முயற்சி ராஜாங்கத்தில் எடுத்துக் கொள்ளவில்லை" என்று ஆத்திரத்துடன் சொன்னார். இதைக்கேட்ட இன்னொருவர், "ஸார், ஸார், காங்கிரஸ் ராஜ்யம் என்கிறதை மறந்துடவேண்டாம். மந்திரிகள் தொழில் அபிவிருத்தி தங்களாலே ரொம்ப கிளர்ச்சியடையப் போவதாய் ஊரூராய்ச் சென்றுபறை சாற்றுகிறார்களே, நம் நாட்டில் உள்ள ரேடியோ எஞ்சினீர்களைக் கொண்டு சுலபமாய் செட்டுகள் செய்யச் சொல்லப் படாது? இதில் சுதேசியைக் காணோமே" என்று குத்திக் காட்டினார். அதற்கு மற்றொருவர், "ஏதையா, விஷயம் தெரியாமல் சொல்லுகிறீர். காங்கிரஸ் கவர்மெண்டா யிருக்கட்டும், எந்த கவர்மெண்டா யிருக்கட்டும், இன்றைக்கே பிள்ளைப் பெறு என்றால் முடியுமா? அவர்களும் தகுந்த முயற்சி செய்துகொண்டுதான் இருப்பார்கள்" என்று பரிந்து கூறினர். இதைக்கேட்டு, ராமாநுஜத்துக்கடுத்தாப்போல் உட்கார்ந்த ஸங்கீத வித்வான் ஒருவர், 'இந்த ரேடியோ இல்லேனு யார் அழுதா? பொய்யும் பித்தலாட்டமும் தவிர நிஜம் ஒரு அக்ஷரம்கூட வரதில்லை. ஸங்கீதத்தை நாசம் பண்ணரத்துக்கு பாக்கி இருக்கரதெல்லாம் போராதுன்னு இது வேறே கிளம்பிருக்கு. அம்பது, நூறு வாங்கிண்டு, அரைமணி ஒருமணிநேரத்

திலே ஏதோ இங்கிலீஷ் நோட்டு மாதிரி பத்துப் பதினஞ்சு உருப்படி சடபட ன்னு வாரியெருஞ்சுட்டு வராளே, மகா வித்வான்களுன்னு வழங்கர ப்ரபுக்கள், இவாள்ளாம் நாத ப்ரும்ஹத்திலே லயிச்சு ஆத்மா பரவசமாகிப் பாடறாள்னு நினைக்கிறீரோ? வெரும் ப்ரமை! அவன் பாடரபோதுபாட்டிலே எங்கே யெண்ண மிருக்கு? மனசிலே ஆயிரம் குரோதம், பக்கவாத்தியக்காரனிண்டே சண்டெ போடறதே குறி. ஸங்கீதம் எங்கே உருப் படும்'' என்று சீறினர். "இவருக்கு ரேடியோவிலே ஒரு 'சான்ஸ்' தரலேப் போலேருக்கு, அதான் இவ்வளவு ஆத் திரம்'' என்று ராமானுஜம் தன் மன துக்குள் சிரித்துக்கொண்டு, "நீங்கள் சொல்லுவது ரொம்ப சரி'' என்று தலை யாட்டினன். இந்தத் தர்க்கம் எல்லாம், முதல் நாள் இரவு கொசுக்கடியால் நல்ல தூக்கமில்லாமல் அயர்ந்திருந்த அவ னுக்குக் காதில் பூராவாக ஏறவில்லை. ஆனல் ரூ. 15க்கு ரேடியோ செட்டுக் கிடைக்கும் காலமும் வரலாமென்பது மட்டும் அவன் மனதில் பதிந்தது. அவ னுக்குச் சங்கீதத்தில் ஏராளப் பைத்தி யம். அமுஞ்சிக் கச்சேரி ஒன்றுகூட விடமாட்டான். லீவுநாளெல்லாம் திரு வல்லிக்கேணி கடற்கரை ரேடியோவைப் போய்க் கேட்பது தவறுவதில்லை. ஆனல் தான் ஒரு செட்டு வாங்கிவைத் துக் கேட்கப்போவதாக அவன் சொப் பனத்தில் கூட எண்ணினதில்லை.

* * *

சுவர்களுக்குப் பச்சைவர்ண மடிக்கப் பட்ட ஒரு அழகான அறை. அதில் கண் ணுக்குக் குளிர்ச்சியான வெளிச்சம் நிலவுபோல் வீசிக்கொண் டிருந்தது. கருங்காலி மேஜைமேல் புதுக்கருக்கு அழியாத ஒரு ரேடியோ செட்டு வைக் கப்பட்டிருந்தது. சமீபத்தில் மெத்தை தைத்த நீண்ட நாற்காலியில் ராமாநுஜம் படுத்துக்கொண்டு கை கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே யிருந்தான். 7 மணி யடித்தது. அன்று கான கேஸரி காமாக்ஷி அய்யர் கச்சேரி என்று 'புரோக் கிராமில்' போட்டிருந்ததைக் கவனித்து அவன் ஆவலுடன் 7 மணிக்கு ஆரம்ப மாகும் அவர் வினிகையை எதிர்பார்த் திருந்தான். "ஆலிண்டியா ரேடியோ காலிங். இன்று கானகேஸரி காமாக்ஷி பாகவதர் ஓர் இனிய சங்கீதக் கச்சேரி செய்வார். முதலில் பைரவி வர்ணம் பாடப்படும்'' என்ற வார்த்தை காதில் விழவே அவன் சந்தோஷம் இரட்டிப் படைந்தது. பச்சைமிரியம் ஆதிப் பையருடைய அந்த தெய்வீகச் சிருஷ்டி எத்தனைகோடி ஆத்மாக்கள் உள்ளம் குளிர்ச்சி செய்திருக்கிறது என்று யார் கணக்கிடமுடியும். இப்படி இனிமையான கானத்தை எதிர்பார்த்த ராமாநுஜத்துக் குத் தூக்கி வாரிப் போட்டாப்போல் காக்கையினும் கடுங்குரலில் கானகேஸரி பேசும் பேச்சுகாதில் நாராசமாய் விழ ஆரம்பித்தது.

"இந்த கர்னடப் பேத்தலை யெல்லாம் கட்டிண்டு மாரடிப்பாளோ. புது, புது தினுசாய் ஹிந்துஸ்தானி மெட்டுகள், எவ்வளவு கிளம்பி யிருக்கு, இந்த ரேடி யோக்காரர்களுக்கு ஒரெழவும் தெரி யல்லே. நமக்கென்ன ஆகணும், ரூபா தானே.........ஓகோ, பிடில்காரன் என்ன வெரைக்கிறனே! நம்ம சமாச் சாரம் தெரியாதுபோலேருக்கு. தாளம் தகராருன்ன நெனச்சுண்டே — இரு தம்பி, ஒன் கொட்டத்தை அடக்கு றேன் ஒரு நொடியிலே. இதோ துரிதத் திலே வேலை செய்யரேன். சௌக்க வர்ணமாயிருந்தா யென்ன, துரிதத்திலே வேலை செய்யப்படாதுன்னு யார் சொல் ரவன்? கச்சேரியில் தலையாட்டர ஆடு களுக்கு என்ன தெரியும்!......அப்பா, ஒக்காந்தாண்டா, ஏன் அவன் இம்மே வில்லை யெடுக்கருன்! சரி, ஒருதரம் வெத்தலை போட்டுக்கலாம், ரொம்ப நாழியாச்சு......அட இழவே, அதுக்குக் கூடப் பொழுதில்லாமே ஒரு மணிக் குள்ளே பத்து உருப்படி பாடணமாம், அதிலே ராக ஆலாபனம் வேறே, ராக மாலிகை வேறே. வாழ்ந்தது! இந்த ரூ. 50க்கு—அரைமணியில் சம்பாதிப் பேன் அதை—ஆயிரம் கட்டுப்பாடு. சே முழு அசட்டுத்தனம் இதிலெல்லாம் வந்து மாட்டிக்கிறது...ராகத்தை சங் க்ஷேபமாய்க் காட்டிவிட்டேன், எனக்கா தெரியாது ஏமாத்த. பல்லவிலே மிரு தங்கக்காரனுக்கு ஒரு ஆவர்த்தம்

கொடுத்து ஒரு கலர் சாப்பிட்டுவிட்டு ஒருதரம் முறுக்கலாம்......ஓகோ போக்கிரிப் பயல்கள்! ரெண்டுபேரும் சேர்ந்து கொண்டு நம்மையா அமுக்கப் பார்க்கிறான்கள், மூக்கை யுடைக்கிறேன்...... ஆரிட்டெ ஒன் கை வரிசை,...சந்துகிந்தெல்லாம் பேத்துடுவேன்,......இதோக் கொடுத்தேன் பார்......விழுந்துதா சரியாய்......வராதே நம்ம வழிக்கி?...... ஜாக்கிரதை, ஜாக்கிரதை, ஜாக்கிரதை."

இவ்விதமாய் (புரோக்ராம்படி) "கபடநாடக சூத்திரதாரி" என்ற பல்லவி தீர்மானம் வைக்க வேண்டிய இடத்தில் ஒரே யடியாய் வசை வார்த்தைகளும் கூக்குரலும் கேட்கவே, திகைத்துத் தடுமாறி அசைவற்று உட்கார்ந்திருந்த ராமானுஜத்துக்குக் கண்ணில் பொறி பறந்தது. "இதென்ன, அநியாயம், வருஷத்தில் 10 ரூபாய் லைசென்சுக்குத் தொலைக்கிறேனே, பாடகன் பித்துப் பிடித்துப் பிதற்றுவதையெல்லாம் கேட்கும் உரிமைக்காகவா? பாட்டு என்கிற சமாசாரத்தையே காணோமே! என்ன, இந்த ரேடியோ அதிகாரிகள் தூங்கிக் கொண்டிருக்கிறார்களா?" என்று இரைந்துவிட்டுக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி 8. புரோக்ராமைப் பார்த்தான். சட்டசபைத் தேர்தல் சமீபத்தில் ஏற்படலாமென்ற ஒரு சந்தேகமிருந்ததால், ஒவ்வொரு கக்ஷிக்காரரும் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டு வாக்காளருக்கு ஊக்கம் உண்டுபண்ணும் பொருட்டு ரேடியோவில் ஒரு 'வாக்குவாதம்' ஏற்பாடு பண்ணி யிருப்பதாகத் தெரிந்தது. "ஸங்கீதம் கேட்க ஆரம்பித்து வசவு காதில் ரொம்பித்து; வசவு கேட்க ஆரம்பித்தால் ஒருவேளை சங்கீதம் வருமோ என்னவோ, பார்க்கலாம்" என்று திரும்ப நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

உடனே அவன் கண்ணெதிரேயுள்ள வெள்ளைத்திரையில் ஒரு படக்காக்ஷி தோன்றிற்று. "ஓகோ 'டெலவிஷன்' போலேருக்கு! நல்லவேளையாய் சங்கீதக் கச்சேரியை 'டெலெவைஸ்' பண்ணாமல் விட்டார்களே" என்று ராமானுஜம் எண்ணி மகிழ்ந்தான். ஒரு வட்டமேஜை, அதைச் சுற்றி ஐந்து நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர்களில் ஒருவர் எழுந்து, ராமானுஜத்தை நோக்கி நின்று 'டென்னிஸ் ஷூ' அணிந்திருந்த ஒரு காலைத் தூக்கி நாற்காலியில் வைத்து அரைவாசி எரிந்திருந்த சிகரெட்டை வாயிலிருந்து எடுத்துச் சாம்பலைத் தட்டிவிட்டு, தலையில் கோணலாய் அமர்த்தியிருந்த கதர்க் குல்லாவை இன்னும் சற்று அதிகமாய்ச் சாய்த்து வைத்துக்கொண்டு ஒரு அலக்ஷியச் சிரிப்புச் சிரித்துப் பின்வருமாறு பேசலானார்.

"சகோதர சகோதரிகளே, காங்கிரசுக்கே தங்கள் ஓட்டைக் கொடுக்க வேணுமென்று நான் சொல்லவேண்டியதே யில்லையென்று நம்புகிறேன். 'நதீனும் ஸாகரோகதிஹி' என்றபழமொழிப்படி எந்தக் கக்ஷியாரும் கடைசியில் அதில் வந்து மடங்கித்தான் தீரவேணும். இப்பொழுது என் கதையைப் பாருங்கள். ஜஸ்டிஸ் கக்ஷி, சுயமரியாதைக் கக்ஷி, மிதவாதக் கக்ஷி, தனிக் கக்ஷி, தேசீயக் கக்ஷி இவ்வளவு கக்ஷி நான் சட்ட சபைக்கு வந்த ஏழு வருஷத்துக்குள் பார்த்தாய் விட்டது. தலைவனாயும் இருந்து பார்த்தேன். பின் தொடர்ந்தும் பார்த்தேன். ஒன்றும் சுவாரசியமில்லை. தலைவனா யிருந்தால் பின் தொடருபவரில்லை. பின் தொடர்ந்தால், அகனி அகனி காலக்ஷேபம் பண்ணுவதற்கு வழியில்லை. ஏதாவது ரூ.100, 200-இல் ஒரு வேலை கிடைத்தால் போய் விடலாமென்று அக் கக்ஷித் தலைவர்கள் ஒவ்வொருவராய்ப் போய்ச் சரண் புகுந்தேன். முழங்காலுக்கு விளக்கெண்ணை போடவேண்டியதாயிற்றே யொழிய சால் காசுக்கு உபயோகமில்லை. அவர்கள் அத்தான், அம்மாஞ்சி, சித்தாப்பா பிள்ளை, பெரியப்பா பிள்ளை, மைத்துனன், மாமன் இவர்களுக்கெல்லாம் வேலை கொடுத்து மிஞ்சினாலன்றோ எனக்கு கிடைக்கும் வேலை? நல்லவேளையாய் முன் தேர்தல் வரும் சமயத்தில் என் நண்பர் ஒருவர், காங்கிரசுக்குப் பிரசாரிகள் தேவையென்றும், மாதச் சம்பளம் திட்டமாய்க் கிடைக்குமென்றும், அதில் காலணா சிலவு செய்யாமல் வீட்டில் கொடுத்துவிட்டு, ஊரூராய்ப் போய்

நல்ல நல்ல விருந்து சாப்பிட்டு என் வாக்கு விருந்தை அவ் வூராருக்கு அளித்து தேசத் தொண்டு செய்வதை விட வேறு பாக்கியமில்லை என்றும் எடுத்துச் சொன்னார். எனக்கும் சரியெனப் பட்டது. அன்று முதல் ஆகாரக் கவலையில்லை. தேர்தல் நடந்தது, நானும் காங்கிரஸ் அபேக்ஷகனாக நின்று தேர்ந்தெடுக்கப் பட்டேன். மாதம் ரூபாய் 75 சம்பளம், வேலை கிடையாது. வாயை திறக்கப்படாதென்று நிபந்தனை. இப்படி எந்த எஜமான் சொல்லப் போரான், நீங்களே யோசியுங்கள். தேச முன்னேற்றத்தைப்பற்றி நம்மைப் போன்ற பாமரர்கள் கவலைப்பட்டு சீர்திருத்தப் பிரேரணைகளை நோண்டிப் பார்த்து மண்டையை உடைத்துக் கொள்வது சுத்த முட்டாள்தனம். அதெல்லாம் தலைவர் பாடு, எதிர்கக்ஷிக்காரர் என்று வங்கிலிருந்து எலி தலையைக் காட்டுவது போலக் கீச்சு மூச்சென்பதும் யாராவது திரும்பிப் பார்த்தால் உடனே தலையை உள்ளே இழுத்துக் கொள்ளுவதுமாய்த் தடுமாறுகிறார்களே, இதோ எனக்கெதிரே இருக்கும் மகான்கள், இவர்கள் பாடு. வந்தே மாதரம்” என்று கோஷித்துத் தலைக் குல்லாவைக் கழட்டி உயர எறிந்து பந்தைத் தாங்குவதுபோல் தலையால் தாங்கிஉல்லாசமாய்ஆசனத்தில்அமர்ந்து சிகரெட்டை ஊத ஆரம்பித்தார். “ஏது, இது புது தினுஸான ‘லெக்ச’ரா யிருக்கே. அரசியலில் ஈடுபட்டவர்களுக்கில்லாத வழக்கத்தைக் கைப்பற்றி இவர் நிஜம் பேசுவது போலன்றோ தோன்றுகிறது” என்று ராமாநுஜம் வியந்தான்.

உடனே சற்று வயதான ஒருவர் எழுந்து, ஒரு கனைப்புக் கனைத்து, தங்கப் பிடிபோட்ட தடியில் இரண்டு கைகளையும் ஊன்றிக்கொண்டு பேசலானார். காலில் கருப்புமேஜோடு, அதற்கு மேல் பஞ்சள் அரை பூட்ஸ், தூணுக்குப் பாவாடை சுற்றினது போன்ற கச்சம், ‘வெஸ்டுகோட்டு’, கழுத்தில் மடிப்புப் பிரிக்காத யோக வேஷ்டி, தலையில் மஸ்லின் தலைக் குட்டை—இந்த அடையாளங்களிலிருந்து இவர் மிதவாதி என்று ராமாநுஜம் ஊகித்தான். காரியம் முன்பின் இருந்தாலும் பேச்சு நன்றாயிருக்கலாமென்ற எண்ணத்துடன் கவனித்தான். அவர் சொன்னதாவது, “கனவான்களே, சீமாட்டிகளே, எனக்கு முன் பேசின நண்பரின் நிலைமையைக் கண்டு நான் பரிதபிக்கிறேன். கைதூக்கும் உரிமை ஒன்று தவிர வேறு எவ்வித உரிமையுமில்லாத இவரா தேசத்துக்குச் சுயேச்சையை சம்பாதிக்கப் போகிறார். நாங்கள் சுயேச்சையைப் பற்றிப் பேசுவதில்லை, காரியத்தில் காண்பிக்கிறோம். எங்களில் தலைவர், மற்றவர் என்ற வித்தியாசமும் கிடையாது. எல்லோரும் தலைவர்களே. பிழைக்கப் பிறர் தயவு எனக்கு வேண்டாம். பகவான் எதேஷ்டமாய்க் கொடுக்கிறார். ரூ. 500 க்குக் குறைந்து ‘டெயிலி பீஸ்’ வாங்குகிறதில்லை. தேசசேவை முக்கியம்தான். அதற்காக மற்ற விஷயங்களை விட்டுவிட முடியுமா? அதுபோல் அந்நிய நாட்டார் வந்து ராஜ்யம் பண்ணுவதிலுள்ள கோளாறுகளை மரியாதையாய் எடுத்துச் சொல்லி அவைகளைச்சீர் திருத்தவேணும். தெய்வசங்கல்பமாய் ஏற்பட்ட அவர்கள் சம்பந்தம் முற்றும் அறுபட வேணுமென்பது பொருந்துமோ? புரட்சியல்லவோ உண்டாகும். பல்லக்குத் தூக்குகிறவன் பல்லக்கு ஏறுகிறவன் என்ற வித்தியாசமெல்லாம் அற்றுப்போய் ‘கம்யூனிஸம்’ வருவதற்கு அதுதான் வழி. அப்பேர்க்கொத்த கஷ்டங்களையெல்லாம் பார்ப்பதற்குள் நான் கண்ணை மூட வேணுமே என்று தான் பகவானைப் பிரார்த்திப்பது.

சமத்துவம் வேண்டியதுதான், இப்பொழுது ஹரிஜனங்களைக் கோவிலுக்குள் விடவேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். அதைப்பற்றி எனக்கு ஆக்ஷேபம் இல்லை. கோவில் குளம் துலைந்துபோகட்டும், அங்கே யார் போகிறார்கள். ஆனால் ஒரு விஷயம் யோசிக்க வேண்டும். நாளைக்கு இதே மாதிரி செல்வந்தர்களின் சொத்துச் சுதந்தரங்களிலும் இல்லாதாருக்கு வீதமுண்டு என்று பொட்டைக் கக்ஷி பேசுவதற்கல்லவோ வழி ஏற்பட்டுவிடும். ஆகையால் தனிச் சுயேச்சை இந்தியாவுக்கு வேண்டாமென்பது என் தீர்மானம். நீங்கள் என் வார்த்தையைக் காதில் வாங்கமாட்

டீர்கள் என்று எனக்கு நன்ருய்த் தெரியும். நான் உங்கள் வோட்டை கேட்க வரவில்லே. கேட்டால்தானே கிடைக்க வில்லே என்ற வருத்தம். நான் சொல்லுவதின் மெய் உங்களுக்கு இப்பொழுது வெளிப்படாது. அது உங்கள் துர்பாக்கியமே! லாங் லிவ் டோமினியன் ஸ்டேடஸ்'' என்று கம்பீரமாய்க் கூறித் தன் கைகளே அடக்கமாகக் கொட்டி தன்னேயே ஆமோதித்து உட்கார்ந்தார்.

உடனே தென்தேசத்து மஹம்மதியர் ஒருவர் எழுந்து, மேற்கு திக்கைப் பார்த்து வணங்கிச் சொல்லுகிருர், "இஸ்லாமிய நேயர்களே, முஸ்லீம் லீகில் சேருங்கள். நமது சட்ட சபையில் காலத்தை அனுசரியுங்கள். காங்கிரஸ் கட்சியோ, ஜஸ்டிஸ் கட்சியோ, வேறெந்தக் கட்சியோ அதிகாரம் செலுத்தட்டும், நம்ம உரிமைகளே அவர்கள் தொட முடியாது. நமது காரியங்களே அவர்களேக்கொண்டே சாதித்துக்கொள்ளலாம். இப்பொழுது இந்த ஹிந்தி சமாசாரத்தைஎடுத்துக்கொள்வோம்.எனக்கு ஹிந்தியும் தெரியாது, உர்துவும் தெரியாது, தமிழும் சற்று முன்பின்தான்; அதனுல் என்ன? நம்ம பார்ப்பனக் கணக்குப் பிள்ளேகள் வேண்டியதைச் செய்கிருர்கள். இங்கிலீஷை இந்துக்கள் கற்றுக்கொண்டதில் இங்கிலீஷ் நாகரீகம் வியாபித்தது. அவர்கள் ஹிந்தி கற்றுக்கொண்டால் இஸ்லாம் தானே பரவுகிறது. அதுபோலவே, கடன்பட்டோருக்குச் சௌகரியம் செய்த மசோதா நம் நபி நாயகம் வட்டி வாங்கக்கூடாது என்று சொன்னதை யொட்டியே இருக்கிறது. தவிர, மஹம்மதிய சாவுக்கார்களுக்கு அதனுல் அதிகமாய் ஒன்றும் நஷ்டமில்லே என்றது கவனிக்கத் தகுந்தது. இரண்டொருவன் ஏமாந்து போனுல் அது ஆண்டவன் திருவுள்ளம் என்றே எண்ணவேணும். ஆகையால் சகோதரர்களே, காரியத்தில் கண்ணுயிருங்கள், அல்லாஹோ ஆக்பர்'' என்று பொறுக்காயும், குறிப்பாயும் பத்து வார்த்தைகளேச் சொல்லி முடித்தார்.

இரண்டு நிமிஷம் நிசப்தமாயிருந்தது ஒருவர் மெதுவாகத் தன் இடத்தில் எழுந்து நின்று, ராமாநுஜத்தைச் சலிப்புடன் உற்றுநோக்கி அவனுக்குப் பின்புறத்தைக் காட்டிக்கொண்டு மனதுக்குள் பேசுபவர்போல் உதட்டைக் கடித்தார். இவருக்குத் தோல் கறுப்பே யொழிய வேறு எவ்விதத்திலும்—நடை, உடை, பாவனேகளில்— வெள்ளேக்காரர்களுக்கும் இவருக்கும் ஒரு வித்தியாசமும் தெரியவில்லே. 'ஹாட்'டை அலக்ஷியமாய்க் கையில் சுற்றிக் கொண்டு இவர் முணுமுணுப்பதை ஊகித்துக் கேட்ட ராமாநுஜம் பின்வரும் வார்த்தைகளேப் புரிந்துகொண்டான்.

"இந்த காங்கிரஸ் பாபிகளால் பல தொல்லே. பொதுக்கூட்டங்களில் பேசுவது, தாய்ப் பாஷையில் பேசுவது என்ற மட்டப் பழக்கங்கள் எல்லாம் பரவி ஊரை நாசமாக்குகின்றன. நான் பத்துபேருக்கு முன் பேசி எத்தனேயோ காலமாச்சு. அதுவும் இரண்டு வருஷமாய் வாய்திறக்கவேண்டிய அவசியமே யில்லே. இப்பொழுதுகூட பிறர் மூஞ்சியைப் பார்க்க வேண்டிய அவசியமில்லாததால் தான் இந்த விவாதத்தில் சம்பந்தப்பட ஒப்புக்கொண்டேன். யாருக்குவேண்டியிருக்கு இந்த வாக்காளர்களே முகங் கொடுத்துப் பேச! நல்ல வேளேயாய் நம்ம பிரசாரம் தேவை யில்லே. ஹிந்துஸ்தானி நல்ல சமயத்துக்கு வந்தது. 'கிரிமினல் லா அமெண்டுமெண்டு' சட்டத்தைக் கையாளுவதில் நம்ம சிஷ்யர்களாய்விட்டார்களே இந்த காங்கிரஸ் காரர்கள். வாஸ்தவத்திலே இப்பொழுது ராஜாங்கம் அவர்களது அல்ல. நம்முடையதே. காங்கிரஸ் அப்பிராமணருக்கு நம்மைக்காட்டிலும் பார்ப்பனரிடத்தில் குறிப்பு அதிகம். அந்தக் கட்சியில் கொஞ்சமும் பார்ப்பனர் தலேயெடுக்க முடியாமல் எவ்வளவு பங்கிடாக நடத்தி வருகிருர்கள்! நமது கொள்கைகள் ஒவ்வொன்ருய் நிறைவேறி வருகின்றன, ஆக்ஷேபமில்லே.ஜமீன்தார்களேத் தாக்கப் பார்க்கிருர்களேயென்று யோசிக்கிறீர்களோ? அதெல்லாம் வீண்பயம். முன் அப்படித்தான் முனுசாமிநாயுடு, பாவம், முயற்சி பண்ணினுர். என்ன ஆயிற்று! இருவரும் சேர்ந்து இனும் தாரரான ஏழைகளேக் காவுகொடுத்தோம். இந்தத் தடவை அதேமாதிரி

கழுவுக்கு ஏத்த கோமட்டி ரயத்துவாரி மிராசுதார் எங்கேபோனான்? ஒரு முக்கியமான விஷயம். என்னவிதமான பாத்தியமானால் என்ன? பணக்காரன் நஷ்டப்படப் போவதில்லை. எழையிடம் பிடுங்கி அவனிடம் கொடுக்கும் தர்மம் செவ்வனே நடந்துவருகிறது. இதை காங்கிரஸ்காரர் மறுக்கமுடியுமா? ‘மாரடோரியம் பில்’லில் பணக்கார விவசாயிகளுக்கு கடன்மசோதாவின் சௌகரியம் கிடையாது என்று அமைத்திருந்ததே, அதை ஏன் வாபீஸ் வாங்கினார்கள்? ஆகையால், பார்ப்பன ரல்லாதாரே, பதரவேண்டாம். ஸ்தல ஸ்தாபனங்களெல்லாம் அநேகமாக நம் கையிலிருக்கின்றன; முக்கியமான உத்தியோகங்களிலிருந்து பார்ப்பனரை ஒட்டிவிட்டோம். பாக்கி அவர்களுக்கு ஒன்று இரண்டு இருக்கும் பற்களையும் காங்கிரஸ் குரடாவைக் கொண்டே பிடுங்கிவிடுவோம். கோயில்களை ஹரி ஜனங்களுக்குத் திறக்கவில்லையே என்று நாம் ஏங்கவில்லை. இருந்தாலும் குருக்கள்மாருக்கு வரும்படி குறையும் என்பதில் சந்தோஷமே. பார்ப்பனப் பூண்டொழிக.”

இந்த மகான் கீழே உட்காருவதற்குள் அவரைக் கொஞ்சம்கூட மரியாதையில்லாமல் ஒருபுறம் தள்ளி, ஒட்டை நீளம் தலை மயிர் அலங்கோலமாய் தொங்க, வெள்ளைக் குடுத்தாவும், கழுத்தில் ஒரு சிவப்பு ‘டை’யும் கட்டிக்கொண்ட ஒரு சிறுவன் கைகளை வேகமாய் ஆட்டிக்கொண்டு கர்ஜிக்க லானான். “ஆயிற்று, ஆயிற்று, உங்கள் ஆட்டமெல்லாம் சீக்கிரம் ஒழியப் போகிறது. புரட்சி வெள்ளம் புரண்டு வருகிறது. இந்தக் கோயில்களைத் துலைத்தால் சாமி, பூதம் என்கிற பிதற்றலெல்லாம் ஒருவாறு ஓயும். சின்னச் சொத்துக்காரர்களைப் பெரிய முதலாளிகள் விழுங்கட்டும், அப்புறம் அவர்களை நாங்கள் சுலபமாய் விழுங்கி விடுவோம். இந்தக்காங்கிரஸ்காரர் அஹிம்சை, சமத்துவமென்றெல்லாம் வாய்க்கு வந்தபடி சொல்லிக் கொண்டிருக்கட்டும். சமயம் வரும்போது இந்த அசடுகளை ஓரறை அறைந்து வீழ்த்திச் சிவப்புக்கொடி நிழலில் ஜன நாயகம் நாட்டுவோம். இங்க்விலாப் ஜிண்டாபாட்” என்று பேரிரைச்சல் இரைந்ததோடு நில்லாமல், தன் அருகில் மேஜைமேல் இருந்த மைக்கூடை வீசியெறிந்தான். தன்மேல் அது வந்து விழுந்துவிடுமோ என்று திடுக்கிட்ட ராமாநுஜம் அவசரமாய் ஒருபுறம் நகர ரேடியோ செட்டு அவன் கை பட்டுக் கீழே விழுந்தது. அழகான புது செட்டு உடைந்துவிட்டதோ என்று அவன் அவசரமாய்த் தூக்கினான். அதன் அடியில் தங்க கில்டில் “உட்கருத்தை விண்டு காட்டும் விசித்திரவாணி. சத்தியநாட்டில் செய்யப்பட்டது” என்று எழுதியிருந்தது அவன் கண்ணில் தென்பட்டது. அப்பொழுது தான் அவனுக்கு விஷயம் புரிந்தது. “ஓகோ, அதுதான் பாட்டுக் கேட்காமல் பாடகர் மனதிலுள்ள கொடூர எண்ணம் வார்த்தையாய் நம்ம காதில் வந்து விழுந்தது போலிருக்கு” என்றெண்ணினான். அவனுக்குண்டான வெறுப்புக்கு எல்லையில்லை. “நல்ல ‘பிலிப்ஸ்’ ஸெட்டு வாங்கி வரச்சொன்னால் இதை யாரோ மூடன் வாங்கிவந்தானே. உட்கருத்தை வெளியிடுவதாம்! யார் கேட்டார்கள். சற்று நாழி தமாஷாய்க் காலங்கழிக்க வெண்ணினால் நிஜத்தைச் சொல்லி மனதைப் புண்படுத்துகிறதே, சீ” என்று ஆத்திரமாய்க் காலால் உதைத்தான். அது நூறு சுக்கலாய் உடைந்த சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். டிராம் வண்டியில் எதிர் சீட்டின் கீழ் பந்தோபஸ்த்தாய் வைத்திருந்த டிபன்பாக்ஸ் தன் உதையால் கீழே தள்ளப்பட்டுக் கவிழ்ந்து அதில் இருந்த மோருஞ்சோறு கொட்டிக்கிடந்தது. கஸ்டம் ஹௌஸூம் வந்துவிட்டது. டிராம் கண்டக்டர் கவனிக்காதபடி ஜாக்கிரதையாய்க் காலிப் பாத்திரத்தை எடுத்து மறைத்துக் கொண்டு ராமாநுஜம் ஆபீஸ் போய்ச் சேர்ந்தான். அன்றைக்கு டிபன் வாயில் மண்.

சினிமாவுக்கொரு சட்டம்

[ஸ்ரீ. பெ. கோ. சுந்தரராஜன், பி. ஏ., எல். டி.]

ரொம்ப கனமான விஷயங்களைத் தாங்கிவரும் 'பாரதமணி'யில் கூட மூன்று பக்கங்கள் சினிமாப் படங்கள். இதுதான் பொது ஜனக் கொடுமை. சினிமாப்படம் இல்லாவிட்டால் பத்திரிகை சோபிக்காது என்ற எண்ணம் வலுத்து விட்டது. சினிமாப் படங்கள் தற்போது இருக்கும் நிலையில், அவைகள் பத்திரிகைகளையும், பொது வாழ்க்கையையும் முற்றிலும் கெடுப்பதற்குள் நாமாவது அவைகளைத் திருத்தி நம்மோடு சேர்த்துக் சொள்ளலாம். சினிமா வெறும் சில்லறை விஷயம் என்று இனிமேல் அலக்ஷியமாக இருக்க முடியாது. அது வாழ்க்கையில் நன்ருய் ஊறிப் போய் விட்டது.

கிராமப் புனருத்தாரணத்தில் ரேடியோ அதிகவேலை செய்யமுடியாது. பாட்டுக்கச்சேரிகளில் பாடகர் முகத்தையும் பார்த்துக் கொண்டிருந்தால்தான் ரஸிக்கும். ரேடியோ செவிக்குமாத்திரம் தான் உணவு ஊட்டமுடியும். இதில் அதிக வெற்றி கிடைக்க முடியாது. ஒரு இடத்திலிருந்து பரவும் ஒலியை பலர் ஒரே சமயத்தில் கேட்கிருர்களென்பதைத் தவிர வேறு ஒரு நன்மையும் இதில் இல்லை. ஆனல் இந்த நன்மை தான் இதனுடைய விசேஷகுணம். கண்ணுக்கும் காட்சிகளைக் கொடுக்கும் சினிமா தேசிய முன்னேற்றத்தின் தற்போதைய நிலையில் அதிக உதவி செய்ய முடியும். மதுவிலக்கு தீவிரமாக நடந்து வரும்போது சினிமாவின் உதவியைக் கொண்டு மதுவை ஒழித்தவர்களுடைய புலன்களுக்கு நல்ல விருந்து அளிக்கலாம்.

இந்த யோசனைகள் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டவையல்ல. நூற்றுக் கணக்கானவர்கள் எழுதி யிருக்கிருர்கள். ஆனல் சினிமாவை எந்த முறையில் நன்ருய் உபயோகித்துக் கொள்ளலாம் என்பதை நிர்ணயித்துக் கொள்வது தான் முக்கியம். இதில் சர்க்கார் உதவி அவசியம். காங்கிரஸ் சர்க்கார் சாதித்தவைகள் நமக்குத் தெரியும். அவர்கள் சாதிக்காத விஷயம் இது ஒன்று. தங்களுடைய தேர்தல் பிரசாரத்திற்கு சினிமாவை உபயோகப்படுத்திக் கொண்ட காங்கிரஸ் சர்க்கார் அதற்கு நன்றி செலுத்த வேண்டியது கடமை. அவர்களுடைய தேர்தல்படம் காண்பிக்கப் படாமல் போனது படத்தின் குற்றமல்ல. சினிமாவை அவர்கள் உபயோகப்படுத்தத் தீர்மானித்ததிலிருந்தே சினிமாவின் ஆதிக்கம் நன்ருய்த் தெரிகிறது. இப்பொழுதும் மந்திரிகள் படக்காட்சி திறப்பு விழாக்களுக்குத் தலைமை வகித்துக் கொண்டுதான் இருக்கிருர்கள். வெறும் பிரசங்கங்களோடு நின்று விட்டால் பட முதலாளிகள் தங்களிஷ்டம் போல் தான் படங்களை எடுத்துக்கொண்டிருப்பார்கள். சர்க்கார் செய்ய வேண்டியது என்ன?

"பொதுக் களியாட்டச் சட்டம்" ஒன்று நிறைவேற்ற வேண்டும்.

சினிமாவும் நாடகமும் முக்கியமாக இந்த சட்டத்தால் பாதிக்கப்பட வேண்டும்.

இந்த சட்டத்தின் பிரகாரம் ஒரு புதிய தணிக்கை போர்டு ஏற்படுத்த வேண்டும்.

சினிமாக் கொட்டகைகளில் காண்பிக்கப்படும் படங்களில் ஒரு பாகம் சரித்திர சம்பந்த மானவைகளாகவும், ஒரு பாகம் சமூகத்தின் நல்ல அம்சங்களையும் தேவைகளையும் எடுத்துக் காட்டுபவைகளாகவும் இருக்க வேண்டும். மற்ற படங்களை முதலாளிகள் தங்கள் சௌகரியம் போல் தயாரித்துக் கொள்ளட்டும். அவர்களுடைய வர்த்தகத்தை சட்டம் பாழாக்காமல் பார்த்துக் கொள்வதற்குப் பிரதியாக அவர்கள் சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத படங்களைத் தயாரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இந்தப் படங்களைப் பார்த்துத் தணிக்கைசெய்யும் சபையில் பின் கண்டவர்களை அங்கத்தினர்களாக நியமிக்கலாம்.

கிராம அபிவிருத்தி மந்திரி.

சென்னை, ஆந்திரா, அண்ணாமலை சர்வ கலாசாலை சரித்திர நிபுணர்கள்.

விஜிலன்ஸ் கமிட்டி தலைவர்.

மாதர் சங்கத் தலைவர்.

பத்திரிகை ஆசிரியர்களுள் ஒருவர்.

பிரபல எழுத்தாளர் ஒருவர்.

சிசு சம்ரக்ஷண சங்கத்தின் தலைவர்.

இன்னும் சர்க்கார் உசிதப்படி மற்ற பிரமுகர்களையும், வழக்கம் போல் அதிகாரவர்க்க அங்கத்தினர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வர்த்தக சம்பந்தமான படங்களை நல்ல விதத்தில் உபயோகப் படுத்திக் கொள்வதில் இவைகளைச் செய்யலாம்.

தவிர, சினிமாப்படத்தை ஒரு கல்வி சாதனமாக உபயோகப்படுத்திக் கொள்வதில் சர்க்கார் நேரடியாக சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும்.

கல்வி சம்பந்தமான படங்கள் தயாரிப்பதற்காக கல்வி இலாகாவிலேயே பிரதான நோக்கமாகக் கொண்ட படங்களை மட்டும் தயாரிக்கும் கம்பெனிக்கு சலுகை கொடுக்கலாம்.

ஒவ்வொரு சர்க்கார் போதனா முறைப் பயிற்சிப் பள்ளிக்கூடத்திலும் இந்தப் படங்களைக் காட்டுவதற்காக ஒரு கொட்டகை அமைக்க வேண்டும். இம்மாதிரியான படங்கள் பையன்களுக்கு உபயோகிக்கப் படுவதற்காக எங்கெந்த பிரத்தியேக பள்ளிக்கூடங்கள் காட்சிச் சாலைகள் அமைத்துக் கொள்ளுகின்றனவோ அவைகளுக்குச் சலுகை கொடுக்கலாம்.

இந்த விஷயங்களை சர்க்கார் மேற்கொண்டால் கூடிய சீக்கிரம் சினிமாக் கலையில் சிரத்தை கொண்ட கழகம் ஒன்று ஏற்பட்டு நல்ல படங்களுக்கு சன்மானம் அளிக்கும் நிலை வரும். படம் தயாரிப்பவர்களுக்குள் தன்மையை விருத்தி செய்யும் போட்டி உண்டாகும்.

இந்திய சினிமாத் தொழிலின் வெள்ளி விழாவுக்கு ஸ்ரீ. சத்தியமூர்த்தி தலைமை வகிப்பாரென்று தெரிகிறது. பிரசாரத்தில் நிபுணத்வம் அடைந்த ஸ்ரீ. சத்தியமூர்த்திக்கு சினிமாவின் சக்தி நன்றாய்த் தெரியும். அவரைத் தலைவராக்கத் தீர்மானித்ததே அவருக்கு அக்கலையிலுள்ள ஆர்வத்திற்கு ஒரு அறிகுறி. அவருடைய தலைமையில் சினிமாத்தொழில் சர்க்கார் ஆதரவையும் பொதுஜனங்கள் காட்டும் வழியையும் அடைந்து தன் சக்தி முழுவதும் சமூகத்திற்குப் பயன்படுவதற்கு சந்தர்ப்பம் வாய்க்குமென்று நம்புவது மிகையாகாது.

ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்



வாதாம் மரம்

(ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி, பி.ஏ., பி.எல்.)

ஓர் ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனும் அவனுடைய மனைவியும் மிகவும் அன்னியோன்னியமாய் வாழ்ந்துவந்தார்கள். ஆனால் அவர்களுக்குக் குழந்தைகள் இல்லை.

அவர்கள் வீட்டுக்கு எதிரில் ஒரு வாதாம் மரம் இருந்தது. அதற்கு அடியில் அழகான புல்லாந்தரை இருந்தது. அந்தப் புல் தரையிலே அவர்கள் அடிக்கடி போய் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். அந்த அழகான இடத்திலேயிருந்து தினந்தோறும் கடவுளைத் தொழுவார்கள்.

வெகு காலங்கழித்து, அந்தப் பணக்காரனுடைய மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதைப்பார்த்து அவள் சந்தோஷப்பட்டாள். கடவுளை வாழ்த்தினாள். குழந்தைக்கு ஸ்ரீதரன் என்று பெயரிட்டார்கள். ஆனால் அவளுக்குச் சுரம் கண்டது. அவள் இறந்துவிட்டாள். அவளுடைய புருஷன் அடைந்த வருத்தத்துக்கு அளவே இல்லை. அவளை அந்த வாதாம் மரத்தின் அடியிலே புதைத்தான். அங்கே ஒரு சிறு சமாதி கட்டினான். குழந்தையை உயிருக்கு உயிராய் வளர்த்துவந்தான். ஒவ்வொரு நாளும் அவன் குழந்தையை எடுத்துக்கொண்டு சிறிதுநேரம் வாதாம் மரத்தின் அடியில் இருந்துவிட்டு வருவான்.

அவன் ஒரு நாள் அழகான பெண் ஒருத்தியைப் பார்த்தான். அவளைக் கண்டு ஆசைப்பட்டான். அவளுடைய குணங்களைப்பற்றி விசாரிக்காமல், அவளைக் கலியாணம் செய்துகொண்டான். அவன் முன்போல ஸ்ரீதரனைக் கவனிக்க முடியவில்லை. அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு நீலா என்று பெயரிட்டார்கள். அதுவும் நன்றாக வளர்ந்துவந்தது. பிறகு, தகப்பன் ஸ்ரீதரனை முற்றிலும் மறந்துவிட்டான்.

ஆனால் ஸ்ரீதரனும் நீலாவும் ஒருவர்மேலொருவர் பிரியமாக இருந்தார்கள். ஒன்றாகவே சாப்பிடுவார்கள், விளையாடுவார்கள், படிப்பார்கள். இது நீலாவின் தாயாருக்குப் பிடிக்கவில்லை. அவள் கெட்ட மனம் உடையவள். ஆகையினால் நாளுக்கு நாள் அவளுக்குப் பொறாமை அதிகமாய்க்கொண்டே வந்தது. ஒரு நாள் அவள் பொறாமை வெறியினால் புத்தி கெட்டு ஸ்ரீதரனைக் கொன்றுவிட்டாள்.

கொன்ற பிறகு வருத்தப்பட்டாள். வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்? போன உயிர் வருமா? பிறகு தன் புருஷன் கோபிப்பானே, ஊர்க்காரர்கள் கோபிப்பார்களே, அரசன் தண்டிப்பானே என்ற பயம் வந்தது. வாதாம் மரத்தின் அடியிலே குழி தோண்டி அந்தக் குழந்தையைப் புதைத்துவிட்டாள். அப்பா வந்ததும் ஸ்ரீதரன் அத்தை வீட்டுக்குப் போயிருக்கிறான் என்று சொல்லிவிட்டாள். இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நீலாவுக்குத் துக்கம்பொறுக்க முடியவில்லை.

அன்று சாயங்காலம் அவள் அந்த வாதாம் மரத்தின் அடியில் போய் உட்கார்ந்து விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது. கண்ணிலிருந்து கண்ணீர் பெருகிற்று. அவள் கன்னத்தில் எல்லாம் கண்ணீர் வழிந்தது. அவள் பாவாடையில் விழுந்தது. ஒரு சொட்டுக் கண்ணீர் அந்த இடத்திலே தரையில் விழுந்தது.

விழுந்ததும் அந்த இடத்திலிருந்து ஒரு பக்ஷி கிளம்பிற்று. அது மேலே பறந்து, மரத்தின் கிளையில் உட்கார்ந்துகொண்டு,

"அம்மா நீலா, அழகான நீலா,
தங்க நீலா, தங்கச்சி நீலா,
அழாதே, கண்ணே, அழாதே."

என்றுபாடி விட்டுப் பறந்து ஓடிப்போய் விட்டது. நீலா வீட்டுக்குள் போய்விட்டாள்.

அப்புறம் அந்தப் பக்ஷி ஒரு தட்டான் வீட்டிற்குப் போயிற்று. அவன் கடையிலே அது உட்கார்ந்து கொண்டு,

“ அம்மா கொன்ருள்
அப்பா மறந்தார்
தங்க நீலா பிழைப்பு மூட்டினுள்”
எங்கள் நீலா பிழைப்பு மூட்டினுள் ”

என்று பாடிற்று.

அதைக் கேட்ட தட்டான் ஆச்சரியப்பட்டு, ‘பக்ஷி, பக்ஷி’ இன்னெரு தரம் பாட்டுப் பாடு’ என்ருன்.

“பாட்டுப் பாடினல் என்ன தருவாய் ?” என்றது பக்ஷி.

“ தங்கச் சங்கிலி தருகிறேன் ” என்ருன். பக்ஷி மறுபடியும்

“ அம்மா கொன்ருள்
அப்பா மறந்தார்
தங்க நீலா பிழைப்பு மூட்டினுள்
எங்கள் நீலா பிழைப்பு மூட்டினுள்

என்று பாடிவிட்டுச் சங்கிலியை வாங்கிக் கொண்டு பறந்து ஓடிவிட்டது.

அப்புறம் அது ஒரு மிட்டாய்க் கடைக்குப் போயிற்று. அங்கே போய்

“அம்மா கொன்ருள்
அப்பா மறந்தார்
தங்க நீலா பிழைப்பு மூட்டினுள்
எங்கள் நீலா பிழைப்பு மூட்டினுள்
தட்டான் கொடுத்தான் சங்கிலி”

என்று பாடிற்று.

‘இன்னெரு தரம் பாடு, மிட்டாய் தருகிறேன்’ என்று சொன்னுன் கடைக்கார சாயபு. அது பாடிற்று. அவன் மிட்டாய்ப் பொட்டணம் ஒன்றைக் கட்டிக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டு அங்கேயிருந்து பறந்து போய்விட்டது. ஒரு கல் தச்சன் வீட்டிற்குப் போயிற்று.

அங்கே போய்

“ அம்மா கொன்ருள், அப்பா மறந்தார்
தங்க நீலா பிழைப்பு மூட்டினுள்
எங்கள் நீலா பிழைப்பு மூட்டினுள்
தட்டான் கொடுத்தான் சங்கிலி
மிட்டாய் கொடுத்தான் சாயபு ”

என்று பாடிற்று.

அந்தப் பாட்டைக்கேட்ட கல் தச்சன் ‘குருவி, குருவி இன்னெருதரம் பாடு. பாடினல் குழவி தருகிறேன் என்ருன். அது பாடிவிட்டுக் குழவியை வாங்கிக் கொண்டது. தூக்க முடியாதபடி குழவியைத் தூக்கிக்கொண்டு வாதாம் மரத்துக்குப் போயிற்று. அங்கே மரத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு,

“ அம்மா கொன்ருள், அப்பா மறந்தார்
தங்க நீலா பிழைப்பு மூட்டினுள்
எங்கள் நீலா பிழைப்பு மூட்டினுள்
தட்டான் கொடுத்தான் சங்கிலி
மிட்டாய் கொடுத்தான் சாயபு
நல்ல தச்சன், கல்லுத் தச்சன்
குழவி கொடுத்தான் குழவி ”

என்று கத்து கத்தென்று கத்திற்று.

இதைக் கேட்டு அதனுடைய அப்பா வெளியே வந்து கேட்டார். அவருக்கு ஒன்றும் தெரியவில்லே. நீலா ஓடிவந்து கேட்டாள்.

பாட்டைக்கேட்டு அழுதாள். அம்மா கோபமாய் உள்ளேயிருந்து வந்தாள். பாட்டைக் கேட்டாள். கோபம் இன்னும் அதிகமாக வந்தது. மரத்தின் அடியில் போய் நின்றுகொண்டு பக்ஷியின்மேல் ஒரு கல்லே விட்டெறிந்தாள். பக்ஷி பறந்தோடிற்று. மரத்தின் மேல் இருந்த குழவி அவள் தலேயில் தொப்பென்று விழுந்தது. அதனுல் அவள் மண்டை உடைந்து, கீழே விழுந்தாள்.

அதைக் கண்டு, பறந்துபோன குருவி மறுபடியும் பறந்துவந்து மரத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு,

“அம்மா கொன்ருள், அப்பா மறந்தார்,
தங்க நீலா பிழைப்பு மூட்டினுள்
எங்கள் நீலா பிழைப்பு மூட்டினுள்
தட்டான் கொடுத்தான் சங்கிலி
மிட்டாய் கொடுத்தான் சாயபு
நல்ல தச்சன், கல்லுத் தச்சன்
குழவி கொடுத்தான் குழவி ”

என்று பாடிக்கொண்டிருந்தது.

(ஆங்கிலக் கதையை ஒட்டி எழுதியது.)



ஆரஞ்ஜ் தோல்களை வீணாக்காதீர்கள்!

பஞ்சாப் சமவெளிப் பிரதேசங்களில் ஆரஞ்ஜ் மரங்கள் அபரிமிதமாக வளருகின்றன. அவைகளின் உற்பத்தி நாளுக்குநாள் விருத்தியாய்க்கொண்டே இருக்கிறது. இது வரையில் ஆரஞ்ஜுகள் முக்கியமாகச் சாப்பிடுவதற்கு உபயோகப்பட்டு வந்தன. ஆனால் சிறிது காலத்துக்கு முன்பு தான் பஞ்சாபில், ஆரஞ்ஜ் மொத்தை முதலியவைகள் சிறிய அளவில் செய்ய ஆரம்பித்தார்கள். ஆரஞ்ஜ் மரத்திலிருந்து வேறு சில உபயோகமான வஸ்துக்களும் எடுக்கப்படுகின்றன. ஆனால் இவைகள் இதுவரையில் உண்டாக்கப்படவில்லை. அவைகளில் முக்கியமானவை ஆரஞ்ஜ் எண்ணெயும், 'பெக்டின்' என்ற வஸ்துவும் தான். ஆரஞ்ஜ் எண்ணெய் ருசி அளிப்பதற்காக, மிட்டாய்க் கடைகளில் உபயோகப்படுகிறது. வாசனை திரவியங்களும், மருந்துகளும், செய்ய அதை உபயோகிக்கிறார்கள். 'பெக்டின்' அருந்துவதற்குரிய ஒரு குழம்பான பதார்த்தம் செய்ய உபயோகப்படுகிறது. உள்ளூரிலும், வெளியூரிலும், சந்தைகள், இந்த இரண்டு வஸ்துக்களிலும் வியாபாரம் செய்கின்றன.

சாதாரணமாக, பஞ்சாப் ஆரஞ்ஜ் நல்ல எண்ணெயையும், 'பெக்டினை'யும் தருகிறது. 'பெக்டின் தயாரிப்பது சிறிது சிரமமான வேலையாக இருக்கும். ஆனால் எண்ணெய் மாத்திரம் ஆரஞ்ஜ் தோல்களினின்றும் சுலபமாகப் பிழியப்படுகிறது. இத்தாலி தேசத்தில் செய்வதைப்போல் ஆரஞ்ஜ் தோல்களை விரல்களின் நடுவில் நசுக்கி அந்த எண்ணெயைச் சிறிது சிறிதாக கடற்பஞ்சில் சேர்த்து, பிறகு அதிலிருந்து எண்ணெயைச் சுலபமாக எடுக்கக்கூடும். இந்த வேலையை பஞ்சாப் வீடுகளில் ஸ்திரீகள் சுலபமாகச் செய்யலாம். இந்த எண்ணெய் தோல்களினின்றும் நீராவியுடன் காய்ச்சியும் இறைக்கலாம். இரண்டாவது சொன்ன வழியில் புதிய ஒன்றரை மணங்கு தோல்கள் ஒரு பவுண்டு எண்ணெ கொடுக்கின்றன. இதற்குச் செலவு $3\frac{3}{4}$ ரூ. ஆகிறது. இது பவுண்டு 5 ரூபாய் வீதம் விற்கப்படுகிறது. இந்தத் தொழில் ஆரஞ்ஜு மொத்தை செய்யும் கம்பெனிகளுக்குத் தான் ஏற்றது. அவர்களில் ஒருவரான, அம்ருதாஸ் வியாபாரி, ஒருவர், இந்தத் தொழிலை ஆரம்பித்துவிட்டார்.

சாசுவத செட்டில்மென்ட்

ஜமீன்தாரி குடியானவர்கள் விஷயமாக பிரகாசம் கமிட்டி செய்துள்ள சிபார்சுகளை ஜமீன்தார்கள் தீவிரமாக எதிர்ப்பார்களென்பது யாரும் எதிர்பார்க்கக் கூடியதே. சாதாரணமாக பெரிய மாறுதல்கள் எது ஏற்பட்டாலும் அதை "புரட்சி" யென்று கூறுகிறவர்களும், எந்த 'புரட்சியையும்' பிளேகுக்கு சமமாக வெறுப்பவர்களும் சிலர் இந்நாட்டில் உண்டு. ஆகையால் "புரட்சிகரமானவை" என்று சொல்லி பிரகாசம் கமிட்டி சிபார்சுகளை ஜமீன்தார்களின் வக்கீல்களாக எதிர்க்க சில பத்திரிகைகள் முன்வருவதும் எதிர்பார்க்கத் தக்கதே. எந்த விஷயத்தையும் "புரட்சிகரமான மாறுதல்" என்பதற்காக எதிர்ப்பதோ ஆதரிப்பதோ சரியல்ல. உபயோகிக்கும் அடைமொழி எப்படியிருந்தாலும், செய்யப்படும் காரியம் என்னவென்பதைத் தான் கவனிக்க வேண்டும்.

1802-ம் வருஷத்து சாசுவத செட்டில்மென்ட் படி ஜமீன்தார்கள் சர்க்காருக்குச் செலுத்தும் பேஷ்கஷ் பிற்காலத்தில் மாறாதென்று சாசுவதமாக நிர்ணயிக்கப்பட்டது: பேஷ்கஷ் சாசவதமாக்கப்பட்டதால் ஜமீன்தார்கள் குடியானவர்களிடமிருந்து வாங்கக் கூடிய வாரமும் சாசுவதமாக 'செட்டில்' செய்ததாகவே மதிக்கப்பட வேண்டும் என்பது பிரகாசம் கமிட்டியின் மெஜாரிட்டி அபிப்பிராயம். சாசுவத செட்டில்மென்டின்

லக்ஷியம் அதுதான் என்று கமிட்டி கூறுகிறது. ஆனால் ஜமீன்தார்கள் இதை ஒப்புக்கொள்ளவில்லை. பேஷ்கஷ் மட்டும் மாறக்கூடாது; ஜமீன்தார் தன் இஷ்டம்போல வாரத்தை அதிகப்படுத்த உரிமையுண்டு, என்பது ஜமீன்தார்களின் வாதம். சட்ட சம்பந்தமாக 1802-ல் ஏற்படுத்தப்பட்ட நிலைமை எதாயிருந்தாலும், பிற்காலத்தில் பல தடவைகளில் சர்க்கார் குறுக்கிட்டு வார நிர்ணயத்தில் தலையிட்டிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகையால் பொது நன்மையையும் சமூக க்ஷேமத்தையும் உத்தேசித்து வாரத்தைக் குறைக்கும் முறையில் தலையிடுவதற்குச் சர்க்காருக்கு உரிமையுண்டு. இது ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டால், வாரத்தை எவ்வளவு தூரம் குறைப்பது உசிதமாகும் என்பதுதான் பிரச்னை.

பேஷ்கஷ், வாரம் இவ்விரண்டையும் பற்றி சில புள்ளி விவரங்களைப் பார்ப்போம். இம்மாகாணம் முழுதிலும் ஜமீன்தார்கள் சர்க்காருக்குச் செலுத்தும் பேஷ்கஷ் ரூ. 41·2 லக்ஷம் என்று தெரிகிறது. சாசுவத செட்டில்மெண்டு காலத்தில் பேஷ்கஷ் நிர்ணயித்தபோது சர்க்கார் எவ்வித கணக்குமில்லாமல் நிர்ணயிக்கவில்லை. குறிப்பிட்ட ஒரு சில ஜமீன்கள் விஷயத்தில் பேஷ்கஷ் தொகை "சப்பம்" அல்லது "மான்யம்" முதலிய முறையில் நிர்ணயிக்கப் பட்டாலும் பொதுப்படையாக வாரத்துக்கும் பேஷ்கஷுக்கும் சம்பந்தம் வைத்தே பேஷ்கஷ் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அதாவது ஜமீன்தார் கொடுக்கும் பேஷ்கஷ் அவர் வசூலிக்கும் வாரத்தில் 3 ல் 2 பங்கு (வாரம் 3 ரூபாயானால் பேஷ்கஷ் 2 ரூபாய்.) ஆகவே 'வாரம்" என்பது பேஷ்கஷைப் போல், $1\frac{1}{2}$ மடங்கு. இப்போது ஜமீன்தார்கள் தரும் பேஷ்கஷ் 41·2 லக்ஷம்; ஆகவே அவர்கள் சாசுவத செட்டில்மென்டின்போது வசூலித்த வாரம் 61·8 லக்ஷம் என்றும் ஜமீன்தார்களின் நிகர வருமானம் 20·6 லக்ஷம் என்றும் ஏற்படும். இப்போதோ வெனில் அவர்கள் வசூலிக்கும் வாரம் ரூ. 232·6 லக்ஷம்; ஜமீன்தார்களது நிகர வருமானம் (பேஷ்கஷ் ரூ. 41·2 லக்ஷம் போக) 191·4 லக்ஷம். அதாவது ஜமீன்தார்களின் நிகர வருமானம் 20·6 லக்ஷத்திலிருந்து 191·4 லக்ஷமாக (சுமார் $9\frac{1}{4}$ மடங்கு) உயர்ந்திருக்கிறது. விலைவாசி உயர்வு, ஜமீன்தார்கள் செய்திருப்பதாக சொல்லத்தக்க அபிவிருத்தி இரண்டையும் கொண்டு பார்த்தாலும் ஜமீன் நிலங்களிலிருந்து ஜமீன்தார்களின் நிகர்வருமானம் 9 மடங்கு அதிகரிப்பதற்கு நியாயமில்லை. ஆகவே $9\frac{1}{4}$ மடங்கு லாபத்தில் ஒரு பகுதியாவது சர்க்காருக்கு ஒரு பங்கும் குடியானவர்களுக்கு (வாரச்சுமையை குறைக்கும் முறையில்) ஒரு பங்குமாகக் கிடைப்பதற்கு நியாய முண்டா இல்லையா என்பதுதான் இந்த விவகாரத்தில் முக்கியமான அம்சம். நியாயமேயென்று மதிக்கப்பட்டு சர்க்காருக்கும் அந்த $9\frac{1}{4}$ மடங்கு லாபத்தில் பங்கு கிடைத்தால்தான் (ஜமீன் குடிகளின் வாரச் சுமையை குறைப்பதோடு) சர்க்கார், ரயத்வாரி நிலவரிச் சுமையையும் குறைக்க முடியும். ஜமீன் நிலவரி சம்பந்தமான பிரச்னையில் இந்த நோக்கங்களை முக்கியமாகக் கொண்டு ஏற்பாடு செய்வது அவசியம்.

ரயத்வாரி நிலவரி குறையவேண்டுவது அவசியமே. ஆனால் அவ்வாறு குறைப்பது சாத்தியமாக வேண்டுமானால் ஜமீன் நிலங்களின் மூலம் சர்க்காருக்கு பணம் கிடைப்பது அவசியம். ஆகையால் சாசுவத செட்டில்மெண்ட் மாறவேண்டு மென்பதில் ஜமீன் குடிகள் மட்டுமல்லாது ரயத்வாரி நிலசுவான்களும் சிரத்தை கொள்ளவேண்டும்.

—தினமணி

ஜெர்மனியும் இந்தியாவும்

இந்தியர்கள் சிறந்த பழையநாகரிகம் உடையவர்கள் என்பதற்காகவும், காந்தி, தாகூர் தேசத்தவர் என்பதற்காகவும் ஜெர்மானியர் இந்தியர்களிடத்தில் மிக்க மதிப்பு வைத்திருக்கிறார்கள். ஜெர்மனியில் நான் முன்பின் அறியாத பல பேர்களிடமிருந்து காந்தியைப்பற்றியும் தாகூரைப் பற்றியும் கூறும்படி எனக்கு அழைப்புக் கடிதங்கள் வந்தன. ஜெர்மனியின் நகரங்கள் சுத்தமாக இருக்கின்றன. ஜனங்கள் மரியாதையாகவும் ஒழுங்காகவும் இருக்கிறார்கள். ஜெர்மானியர் வாழ்க்கையையும் அரசியல் நிர்வாகத்தையும் பார்த்தால் அதிகார ஆடம்பரமில்லாமல் எவ்வளவு திறமையாகவும் சிறந்த அமைப்போடும் இருக்கலாம் என்பதை அறிந்தேன். ஜெர்மனி இப்போது மிகவும் பலமுள்ள தேசம். குறுகிய காலத்திற்குள் அடிமையைக் களைந்திருக்கிறது. இந்தியா ஜெர்மனியைக் குறைகூறுவதை விட்டொழித்து, அதன் மேதைக்கும், வழக்கத்திற்கும் உகந்த முறையே ராஜீய சுதந்தரத்தைச் சீக்கிரம் அடைய முயலுமாக.

டாக்டர். ஸி. துவாரகநாத்.

சுகாதாரம்

(ஸ்ரீ. டி. எஸ். ரமணி)

நான் உங்களைப் பார்க்க ஆவலாய்க் கிளம்பினேன். சொல்லி அனுப்பின வண்டியும் வந்துவிட்டது. (எனக்கு மோட்டார் இல்லை, நானிருக்கும் இடத்தில் பக்கத்திலிருக்கும் பல ரோட்டுகளில் மழை நாளில் மோட்டார் போகாது.) கோட் ஷர்ட்டுகளை மாட்டிக் கொண்டு மூக்குக் கண்ணாடியையும் துடைத்துப் போட்டுக் கொண்டு வண்டியில் ஏறப் போனேன். நாராயணசாமி ஓடிவந்து தன் யஜமானரான சோமஸுந்தரம் அய்யர் மயக்கமாக விழுந்து விட்டார், ஜல்தி வரவேணும் என்றான்.

எனக்கு தூக்கிவாரிப் போட்டது. அவர் மயக்கத்திற்காக இல்லை. தினம் யாராவது சிக்கா யிருந்தால்தான் நான் பிழைக்கலாம். ஆனால் சோமஸுந்தரம் அய்யர் இறந்து விடுவாரோ என்ற பயம்தான். அவர் இறந்தால் எனக்கு மாதம் பதினைந்து ரூபாய் 'ரெடி' பணம் போய்விடும்.

சோமஸுந்தரம் அய்யர் குடும்ப வைத்தியன் நான். அவர் மிகவும் நல்ல மனுஷ்யர். வயது நாற்பத்திரெண்டு. மாநிறம். கிராமத்தில் 22 ஏகர் நிலம். அதைப் பார்வையிட நாராயணசாமி காரியம். இதைத் தவிர கிராமப்பட்டாமணியம், கிராம பாதுகாப்பு சங்க மெம்பர், கிராம போர்டு மெம்பர், கிராம கோவாபரேடிவ் ஸொஸைடி பிரிஸிடெண்டு. ஊரில் ஏதாவது சச்சரவு ஏற்பட்டால் சோமஸுந்தரம் அய்யரிடம் வந்தால்தான் தீரும். நியாயமாகவும் தீர்த்து வைப்பார். அதிகாரிகள் யாராவது வந்தால் அவர் வீட்டில் தான் தங்குவார்கள். நல்ல ஸப்ளை நடக்கும் எல்லோருக்கும் அவரிடம் விசுவாஸம்.

ஆகார விஷயத்திலோ ஒரு குறையும் கிடையாது. அய்யர் ஆத்து சாப்பாடு A 1. காலை 6 மணிக்குக் காப்பி, எட்டு அடித்தவுடன் கொஞ்சம் இட்லி அல்லது தோசை. வேணும்னா ஒரு அரை சேர் ஓவல்டின்; 10-30க்கு வென்னீரில் ஸ்னானம். பதினொன்று அடித்தவுடன் நல்ல சாப்பாடு. உடனே அய்யர் சற்று நித்திரைசெய்வார். ஒண்ணரை மணி ரயில் ஸ்டேஷனில் ஊதும்போது டீ ரெடியாக இருக்கும். பிறகு சற்றுக் குழந்தைகளுடன் விளையாடுவார். நாலு மணிக்கெல்லாம் ஷர்ட்டு அங்கவஸ்திரம் போட்டுக்கொண்டு வாக்கிங் ஸ்டிக் எடுத்துக் கொண்டு கிளப்புக்குப் போவார். வழியில் தன் ஸ்நேகிதர் ராஜகோபாலனையும் அழைத்துக் கொண்டு போவது வழக்கம். அங்கேயும் நாஸுக்காக வாதம் அல்வா, ஒரு காரம், ஒரு முக்கால் காப்பி இதுதான் சாப்பிடுவார். பிறகு தெருக்கோடி வரையில் போய்விட்டு வீடு திரும்புவார். உடனே சீட்டுக் கச்சேரி சாதாரண ஆட்டம் தான் தமாஷாக ஆடுவார். எட்டு மணியானதும் சாப்பாடு. 9 மணி அடித்தவுடன் பால் சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போவார். ஊர் நியாயம் மத்தியஸ்தம் எல்லாம் அவர் வீட்டுத் திண்ணையிலேயே தீர்ந்துவிடும். ஊருக்கு யாராவது வேற்று மனுஷ்யர்கள் வந்தால் கோடி ஆத்து பிச்சு சோமஸுந்தரம் அய்யர் வீட்டைக் கைகாட்டி விடுவான். அவர் ஆத்துக்குப் போங்கோ, வெள்ளைக்காரன் வீடு மாதிரி டயம் பிரகாரம் நடக்கும் என்பான்.

நடுவில் ஒன்றே ஒன்று மறந்துவிட்டேன். அதாவது அய்யருக்கு நாலு குழந்தைகள். மூத்த குழந்தை ஞானத்தின் சாந்தி கலியாணத்திற்குப் பணம் ஒருவரும் தரமாட்டீர்கள். பாழாய்ப்போன கடன் நிவாரண சட்டத்தின் கஷ்டம். இதற்கு முன் இருந்த ரூ. 3000த்தையும் கொடுக்கமுடியாமல் சிரமப்படுகிறார். ஏதாவது பணம் புரட்டிக் கொடுக்கலாம் என்றாலும் பணம் வைத்திருப்பவர்கள் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். என்ன பெறுமான புள்ளியாயிருந்தாலும் காலணா கிளப்பமாட்டேன் என்கிறார்கள். நல்லதுக்கும் கெட்டதிற்கும் பேச்சு காங்கிரஸ் ஸர்க்கார்தான். வீட்டு வேலைக்காரன் வேலைக்கு வராவிட்டால், 'என்ன ஸார் காங்கிரஸ் ஸர்க்கார் என்ன மந்திரிகள். குடியானத் தெருவில் ஏதோ தெருக்கூட்டமாம். இதுக்காக ஒருவரும் இன்றைக்கு வேலைக்கு வரவில்லை. வீட்டில் குழந்தை தூக்கக் கூட அசாமியில்லை. என்ன வேண்டிருக்கு ராஜாங்கம்' என்பார் அய்யர். சென்ற பத்து நாளாய் இந்தப் பணக்கவலை சோமஸுந்தரம் அய்யருக்கு ராத்தூக்கமில்லாமல் பண்ணிவிட்டது. அதிலும் நேற்றைய தினம் குழந்தை வைத்துக்கொண்டிருக்கிற பயல் கோவிந்தசாமி

வராததால் ராத்திரி முழுவதும் கண்கொட்டவில்லை. காலையில் எழுந்து காப்பி சாப்பிட்டுவிட்டு வெற்றிலைப்பாக்கு புகையிலை போட்டுக்கொண்டவுடன் சோமஸுந்தரம் அய்யர் மயக்கம் அடித்து திண்ணையிலிருந்து வாசற்படியில் விழுந்துவிட்டார்.

நண்பர்களே, நான் கதை சொல்லவில்லை. எல்லாம் உண்மை. வெளிப் பார்வைக்கு ஒரு குறைவுமில்லை. ஆனால் நல்ல யௌவனப் பருவத்தில் சோமஸுந்தரம் அய்யருக்கு பார்சவாயு வந்த காரணம் அவர் வாழ்க்கைதான். சிதம்பரம் நடராஜாவுக்கு 6 காலம் நேவேத்தியம் என்றால் அய்யருக்கு எழு காலம். அதுவும் நல்ல சாப்பாடு. நீங்கள் பிரமிக்கலாம். எழை இந்தியாவில் ஒரு வேளைகூடக் கஞ்சியில்லாமல் அநேகம் பேர்கள் தவிக்கிறார்கள். நல்ல சாப்பாடு இல்லாமல் இறந்து போகிறவர்கள் பலர். சோமஸுந்தரம் அய்யர் மாதிரி நல்ல மனுஷ்யர்கள் இப்படி சாப்பிட்டுச் சாப்பிட்டு உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். அய்யரைப் போலுள்ள மிராசுதார்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகம். வெளிப் பார்வைக்கு சுகாதார முறையில் ஒரு குறைவுமில்லை. ஆனால் ஜரிமானம் ஆகுமுன் மேன்மேலும் சாப்பிடும் அல்வா நெய் காப்பிதான் அவர்களுக்கு யமனாக வருகிறது.

ஆகாரம் ஜரித்துப் பசியெடுக்கும் முன் சாப்பிடாதீர்கள். அதுவும் இந்த நாளில் உபசாரத்திற்கு வேண்டி ஸ்நேகிதர்கள் வீட்டிலும், அவர்களோடு போகும்போது தமாஷுக்காக காப்பி ஓட்டலிலும் சாப்பிடவேண்டாம். வேலையும் கொஞ்சம்செய்யத்தொடங்குங்கள். மூன்று வேலி மிராசுதாருக்குத் தன் நிலத்தைச் சுற்றிப்பார்க்க காரியஸ்தன் ஒருவன் வேண்டியதில்லை. வீட்டில் குழந்தை தூக்குவதற்காக ஆளும் வேண்டியதில்லை. லோபி என்று என்னை நினைக்காதீர்கள். அப்படி வைதாலும் சம்மதம்.

ஆனால் வேலை செய்து பசி எடுக்கும் போது மாத்திரம் சாப்பிடுங்கள். அய்யர் மயக்கம் அடித்து விழுந்ததால் இந்த வாரம் வந்து உங்களைப் பார்க்க முடியவில்லை. கட்டாயம் அடுத்தவாரம் வருகிறேன். அய்யரைப் போல் மாத்திரம் தினசரி வாழ்க்கை நடத்தாதீர்கள். வியாதிகளைத் தடுத்துக்கொள்வதற்கு இது தான் முதல் வழி.

அகில இந்திய காதி சுதேசி பொருள் காட்சி

17-12-38—15-1-39

ஸ்ரீமதி சரோஜினி தேவி திறந்து வைக்கிறார்

சித்திர மண்டபம்

பொருள் காட்சியில், படக்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கலைஞர்களும், கலா ரசிகர்களும், உதவி செய்யுமாறு வேண்டிக்கொள்ளுகிறோம்.

தெரிந்தெடுக்கப்பட்ட படங்கள் இன்ஷ்யூர் செய்யப்பட்டு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளப்படும்.

ரயில் கன்ஸெஷன் பாரத்திற்கு மனுச் செய்துகொள்ளலாம்.

விபரங்களுக்கு:— காரியதரிசிகள்,

காங்கிரஸ் மண்டபம், மவுண்ட் ரோட், சென்னை.